723

KALANILAYAM

தனிப்பிரதி விலை அணா மூன்று.

கலாநிலயம்

V 5. No. 30. 4. 8. 1932.

M211,N28KN
N32-5.30.
199146

KALANILAYAM

தனிப்பிரதி விலை அணா மூன்று.

கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 8 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

5 AUG 1932

Vol 5.] 1932 ஆகஸ்ட் மீ 4௨ [No. 30

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 581
2. தமிழ்ப்பாடம்
நளவெண்பா - கலிதொடர்காண்டம் 583
3. முருகன் போற்றி மாலை
நாவாலி கா. சோமசுந்தரம் பிள்ளை 585
4. நம்மாழ்வார் வைபவம் (3-ம் பத்து, 4-ம் தசகம்) K. இராஜகோபாலாச்சாரியார் B.A., B.L., 587
5. எல்லாம் வீணே (ஓர் சிறுநாடகம்)
G S. இரகுராமன் B.A. 588
6. பெனிடிக்ட் டி ஸ்பைனோஸா
T. R. இராஜகோபால் 590
7. குன்றுடையானும் மக்களும்
W.V. கோவிந்தசாமி ராஜு B.A.,L.T. 591
8. கம்பராமாயணம் (கரன்வதைப் படலம்)
T. N. சேஷாசலம். B.A. B.L. 592
9. பொதிகைநிகண்டு
S. வையாபுரிப் பிள்ளை B.A.. B.L., 595
10. மலர்வனம்—மதுகரம் 596
11. வர்த்தமானம் 599

அறிக்கை :—கலாநிலயத்தில் மதிப்புரை வரைவதற்குப் புத்தகம் அனுப்புவர் ரூ. 10 கட்டணம் செலுத்த வேண்டும். அப்பொழுதே புத்தகத்தின் குணங்களையுங் குற்றங்களையும் ஆய்ந்து எழுதுவோம். இல்லையேல் புத்தகத்தின் வரவுமாத்திரம் குறிக்கப்படும்.

கலாநிலயம்

விருப்பமும் கருவியும் 5.

சென்றவாரக் கட்டுரையின் முடிவில் நாம் செப்பிய வண்ணம், உரிமையை இழந்திருக்கின்றார்களெனமதிக்கப்படும் இந்தியப் பொதுமக்கள் எவ்வுரிமை யின்மையால் என்ன நன்மையை எய்தமாட்டாதிருக்கின்றார்களென்பதோடு, அவ்வுரிமையைப்பெறுவதால் என்ன நன்மையை எய்துவதற்கு எதிர்பார்த்திருக்கின்றார்களென்பதையும் சிந்தனையாலும் அநுபவத்தாலும், உரிமையை இழக்காதிருக்கின்ற அயல் நாடுகளில் காணக்கிடக்கும் வாழ்க்கையின் செய்திகளாலும் சோதித்தறிய முயன்ற நம் நண்பர்கள் உரிமையின் பொய்ம்மையை உணர்ந்துகொண்டிருப்பாரென எண்ணத் துணிகின்றோம். இவ்வாராய்ச்சியில் தருக்கம் பிழைத்த மயக்கத்தால் தவறிப்போகாமல் காப்பதற்குநாம் மூன்று விடயங்களை மறவாத வழித்துணையாய் உடன்கொண்டு செல்லல்வேண்டும். நாம்—மகாநாட்டு 'நாம்—இப்படியிருக்கின்றோமே'ன்றும், அப்படியெல்லாம் ஆகவேண்டுமே யென்றும், உரிமையை அடைந்தாலன்றோ அது கைகூடும் என்றும் கருதுந்தோறும், "இப்படி" என்பது எதுவென்றும் 'அப்படி' யென்பது எதுவென்றும், அடைவதற்குரிய உரிமை எதுவென்றும் நிச்சயம் செய்துகொண்டு, அம்முடிவுகளுடன் மாறுபடாமல் சேர்த்துச் சேர்த்துச் [illegible] சாரும்வரை குறியாமல் தன் நிழலைத் தானளக்கப் புகுந்ததுபோல் பேசப்பேச விடயங்கள் வகையுந் துறையுமின்றி வீணிற்கு நெடுந்தூரம் வளர்ந்துகொண்டே போவதன்றி முடிவின் முதிர்ச்சியை எவ்விடத்தும் எந்நாளும் எய்துதற்கு யாதும் இயலாது. இவைகளைத் தெளிவுசெய்ய முன் பலமுறை முயன்றிருக்கின்றோமாதலின் மீண்டுமிங்கு விரித்துரைக்கவேண்டா. ஒன்றுமாத்திரம் உணர்ந்தாற் போதும். "நாம்" என்னும் பன்மையைமாற்றி "நான்" என ஒருமையை வைத்துப்பார்த்தால் "இப்படியிருந்து நான் இவ்வுரிமையால் அப்படியாகவேண்டும்" என உரைப்பதெல்லாம் இளிவந்த நகைப்பிற்கே விளைநிலமாகின்ற தன்மை யார்க்கும் எளிதில் புலப்படும் என்று நம்புகின்றோம்.

எனினும் ஒன்று. பொதுநிலையில் உரிமையினது பொய்ம்மை புலப்படுகின்ற அவ்வளவு எளிதில் தனிநிலையில் புலப்படாதிருக்கலாம். பொதுஉரிமை என்பதெல்லாம் பிள்ளைமதிப் பேதைமை என்றெண்ண ஒருவாறு இசைவாரும், தனியுரிமை இல்லையென நினைத்தற்கும் ஆற்றாமல் திகைத்து நிற்பார். "ஆயிரம்ரூபாய் நான்ஒருவனுக்குக் கடன்கொடுத்திருந்தால் அதனைச் சட்டமுறையில் வற்புறுத்தி அவனிடமிருந்து வாங்கிக்கொள்ளஎனக்குத்தான்உரிமையில்லையோ!" என்று அழுத்திக்கேட்போர்க்கு எதிர்விளம்புவது எங்ஙனம்

என ஏங்கவேண்டா. அவ்வுரிமையும் இல்லையென்றே கூசாமற் கூறலாம். உற்றுநோக்குங்கால் ஒன்றும் குடி முழுகிப்போகாது. உரிமையுண்டென்றுஎவர்சொல்லியிருக்கின்றார்? இச்சட்டங்கள்தானே! சட்டங்கள்தாம் சாச்வத உண்மைகள் அல்லவே. நீதியின் போலிகள் இவை; மெய்யுடைய பெருமைக்கு உரியவைகள் ஆகா. நம் அருந்தமிழுடைய ஆன்றோர் மொழிகளே இதற்கு அமைந்த சான்றெனச் சாற்றலாம். "என்பும் உரியர் பிறர்க்கு" என்ற திருவள்ளுவர், கொடுக்கின்ற கடமையையே உரிமையாய் உரைத்திருக்கின்றவோர் இணையிலா உயர்வினைமாத்திரம் இங்கு நாம் உட்கொண்டிது உரைக்கவில்லை. "பெயக்கண்டு நஞ்சுண்டமைவார் நயத்தக்க நாகரிகம் வேண்டுபவர்" என்ற பெரியார்க்கு இது ஒரு பொருளன்று. தமிழ்மொழி வழக்கே நம்முடைய கருத்தை விளக்கி நிலைநிறுத்துதற்குப் போதும். வாங்கினவன் திரும்பிக் கொடுக்க வேண்டும் என்னும் கடமையொன்றே கண்டனரன்றி நம் தமிழ்மக்கள் அதனை இறுப்பதற்கமைந்த உரிமையை அவர் எவ்விடத்தும் வைத்தாரலர். ஆதலின், கடன்காரன் என்ற சொல் வழக்கில் இருக்கின்றதே யொழிய உரிமைக்காரன் என்ற சொல் எங்கும் வழங்கப் பெறுவதில்லை. கடன்காரன் தன் கடமையைச்செலுத்தானுயின் அதனோடு விடயம் முடிந்தது. உரிமைக்காரன் என்றொருவனும் உடனே உலாவர வழியில்லை. ஒருவன் செலுத்தவேண்டிய கடமையை வற்புறுத்தி வாங்கிக்கொள்ளும் உரிமைமற்றவனுக்கு இருக்கின்றதென்னும் இவ் வலக்கொள்கை மேனாட்டுச் சட்ட முறையால் புகுந்ததோர் பொய். வடமொழிச் சாத்திரங்களும் ஒருகால், இரத்தத் தொடர்புபற்றி, இக்கொள்கைக்கு ஒருகால்முகங்கொடுக்கலாம். அது எவ்வாறாயினும், தமிழின் மரபு கண்டறிந்து கையாண்ட தூய்மை இது என்பதை உணர்ந்துகொண்டால் போதும். "நந் தமிழ்மக்கள், நந்தமிழ் மக்கள்" என்று இகலி வீறுபேசவருகின்றவர்கள், "காதல் மணத்தையும்,' ழகரச் சிறப்பையும்" கட்டித்தழுவி, "ஆகையால் எங்களுக்கு இந்த இந்த உரிமையிருக்கின்றது" என்று அறிவற்ற ஆரவாரஞ் செய்யாமல், உரிமையொன்றும் இல்லாமையிற்றானே தங்கள் பெருமை நிலைநிற்கும் உயர்வினை உணர்வாராயின் அவர்களோடு ஏனையோரும் உய்யவல்ல ஏமாப்புடையவர்கள் ஆவார்களே. இதனைத் தெரிந்தாரும் இல்லை, தெரிவிப்பாரும் இல்லை. மெய்ம்மையோ உறங்கிவிடப் பொய்க்களுக்கள் புகுந்து உழல்கின்றன. இக் களுக்களுந் தூர்க்களுக்களா யெழுவது இயல்பே.

கொடுத்த கடனைக் கேட்கின்ற உரிமைதான் இல்லையாயின் பின் இவ்வுலகந்தான் எவ்வாறு நடக்குமென்று மூக்கில் விரல்வைத்து வியப்பிற்குள் முழுகவேண்டா. வியாபார வர்த்தகங்கள்முதல் யாவும் என்னுமென்று ஏங்குவதைக்காட்டிலும், கடனைத் திருப்பிக் கேட்கின்ற உரிமையாலன்றி நடக்கலாற்றுவோர் உலகம் இல்லாமல் ஒழிதலே மேல் எனத் துணிதலே சால்புடைத்து. உனக்கு அப் பணம் திருப்பவேண்டிய தகுதி நீ யுடையவனுயின் அக்கடன் தானே திரும்பும்; இல்லையெனில் அது திரும்பினுலும் பயனில்லை. "கடவுளே உன் கடன்காரர்களுள் சேர்த்துக் கொள்" என்று அமரிக்க அறிஞர் ரால்ப் வால்டோ எமர்ஸன் என்பவர் இவ்விடயத்தைப்பற்றி உரைத்த சில வாக்கியங்களை நாம் முன் ஓர் இடத்தில் மொழிபெயர்த்துத்தந்துளோம். அப்பெரியவர் கருத்துக்களை நம் நண்பர்கள் இங்குக் கற்று ஏற்றுக்கொள்வதுநலம்.

தனிவகையில் உரிமையை மறுத்ததமிழர் அரசியலிலும் அதனை அகற்றிய தகைமையால் பின்னும் பெரியவராகின்றனர். குடிகள் ஆறிலொன்று அரசனுக்குச் செலுத்தவேண்டுமென்பது குடிகளின்கடன். ஆதலால் அது கடமை என்னும் பெயர் பெற்றது. எனினும் இக்கடமையை இறுத்துக்கொள்ளும் உரிமை தனக்கு இருந்ததாக எவ்வரசனும்எண்ணவில்லை. இக்கருத்தை, பயாபதிவேந்தனுடன் சார்த்தித் தோலாமொழித்தேவர் பாடிய அழகினைச் சென்றவாரம் எடுத்துக்காட்டினேம். தமிழ்மரபிற்கே அவ்வழகிய கருத்தும் மொழியும் இயல்பாய் அமையவல்லன. அவ்வாறே, குடிகளை நீதியுடனும் அன்புடனும் காக்கவேண்டும் என்னுங் கடமை அரசன்பாலுளது; ஆயினும் அரசனை நீதியிலும் அன்பிலும் நிலைநிறுத்தக்கூடிய உரிமை குடிகளுக்கு இருந்ததில்லையே.

எனின், இக்காலம் உரிமையென்று கருதப்படுகின்ற அலைச்செய்தி யொன்றுங் உயரிய வாழ்க்கையில் இடம்பெற இயலாது. உரிமையின் நினைவு வளர வளர உலகத்தின் எல்லாப்பாகங்களும் கேடடைந்து வருவதையே காண்கின்றோம். உரிமையைக் கேட்காமல் விட்டாற்றான் மனிதர் பெரும்பாலும் தம் கடமையை நேரே செலுத்துபவர்களாவார். முழுமையாய் நோக்குங்கால் மனிதர் இயற்கையில் கெட்டவர்களல்லர். தருமத்தின்மாட்டே மானுட மனம் இயற்கையாய்ச் சாயும். அவர்களைத்தருமத்தினின்று கெடுப்பவை இவ் வுரிமையனைய செயற்கைச் சாதனங்களே. நல்லவர்களா யிருப்பதற்குரிய வகைகளை ஓர்ந்துணரமாட்டாமையாற்றான் கெட்டவர்போல் மனிதரிற் பெரும்பாலோர் தோன்றுகின்றனர். அதுவுமன்றி, சிலதினங்களுக்குமுன், சென்னைச் கார்ப்பொரேஷன் கல்வியதிகாரியாயிருக்கும்ஸ்ரீமான் G.வந்தனம் அவர்களிடம் நாம் உரையாடிக்கொண்டிருக்கையில் அவர் மிகவும் அருமையாய் எடுத்துக்காட்டியபடி, ஜனங்கள் தங்களிடமிருக்கும் சிற்சிலநற்குணங்களையும்காட்டிக்கொள்ள வகைதெரியாமல் தவிக்கின்றார்கள். அவ்வளவே. இதற்கு இடையூறாயிருக்கும் செயற்கை எண்ணங்களின் பொய்ம்மையை அகற்றிவிடுவோமாயின் தருமந்தான் தானே தலையெடுத்து உரிமையின் ஆட்சிக்குமாறாய்க் கடமையின் ஆட்சியை நிலைநாட்டிக் கடவுளின் விருப்பத்தை இவ்வுலகில் நடத்திவைக்கின்ற வாழ்விற்கு மனிதர் தகுதியுடையவர்களாவார்.

தனிநிலையிலும் இவ்வண்ணம் உரிமையென்பது உண்மையற்றவோர் திப்பியேயாயிருக்கப் பொதுப்பட நடிக்கும் பன்மை வாசகத்தில் அதன் மாயத்தைப் பேசவும் வேண்டுமோ! இப் பொய்ம்மை வெளிப்படாவண்ணம் பன்மை என்னும் அவ்விருள் சூழ்ந்ததனை மறைத்துவைக்கின்றது. "நம்மை நாமே அரசாண்டுகொள்ளும் உரிமை நமக்கு வேண்டும்" என்னும்போது உண்மையாக ஏதோவோர் பிறப்புரிமைபோல் தோன்ற முழங்கும் இவ்வாக்கியம், "என்னை நானே அரசாண்டுகொள்ளும் உரிமை எனக்கு வேண்டும்" என்று மாறுமானுல் கருத்திலேனும் காரியத்திலேனும் ஒருபொருளும் பயவாதபடிற்றுரையாய்முடிகின்றபெற்றிவெட்டவெளிச்சமாகின்ற தன்மையை உய்த்துணர்தற்கு வேண்டிய மதிநுட்பம் இல்லாதார் மிகச்சிலரே இருப்பார் என மதிக்கத் துணிகின்றோம். என்னை நானே அரசாண்டு கொள்வதென்பதற்கு என்னதான் அர்த்தம்? இதற்கு அர்த்தமில்லை என்பதைத் தெரிந்துகொள்ளாமல், பன்மைக்கு மாத்திரம் ஓர் அர்த்தம் இருக்கின்றதென்று மயங்கித் தங்களைத் தாங்களே ஆண்டு கொண்டோமென்ற உரிமையைக் குறைவறக் கையாண்டுவந்தவர்களாகக் கொண்டாடப்பெற்ற ஜப்பானியர் தம் இரத்தத்திலே தோய்த்த விண்ணப்பங்களை இன்று அனுப்பிக்கொண்டிருக்கின்றனர். அமெரிக்காமுதலிய தேசங்களில்கண்ணீரால் மெழுகப்பெறுகின்ற முன்றில்கள் எத்தனையோ! பொய்யென்னும் பேயைக் கும்பிட்டு வாழ்ந்தால் குருதியும் கண்ணீரும் வடிப்பதல்லால் முடிகின்ற வழி வேறுதானுண்டோ. அதே கருவியை வேண்டுகின்றார்களே நம் இந்தியர், ஐயகோ! இவர் விருப்பமும் அதுவேதானே! பொய்வளருநெஞ்சினர்கள் காணுத காட்சியே, நீயே கரி.

M211,N28K.V
N32
19144

தமிழ்ப் பாடம் 30.

நள வெண்பா—கலிதொடர் காண்டம்

[565-வது பக்கத் தொடர்ச்சி]

தங்கள் புலவித் தலையிற் றனித்திருந்த
மங்கை வதன மணியரங்கி—லங்கண்
வடிவாண்மேற் கால்வளைத்து வார்புருவ மென்னுங்
கொடியாடக் கண்டானோர் கூத்து. 21.

பதப்பிரிவு:—தங்கள் புலவித்தலையில் தனித்து இருந்த மங்கை வதனம் அணி அரங்கில் அம் கண் வடி வாள்மேல் கால் வளைத்து வார் புருவம் என்னும் கொடி ஆட கண்டான் ஓர் கூத்து.

பதவுரை.

தங்கள் - தங்களுடைய
புலவித்தலையில் - ஊடலில்
தனித்து - தனியாக
இருந்த - போய் இருந்த
மங்கை - தமயந்தியின்
வதனம் - முகமாகிய
அணி - அழகிய
அரங்கில் - நடனமேடையின்மீது
அம் - அழகிய
கண் - கண்களாகிய
வடி - வடித்துக் கூர்மை செய்த
வாள்மேல் - வாளின்மேல்
கால் - கால்களை
வளைத்து - வளைத்து
வார் - நீண்ட
புருவம் என்னும் - புருவமென்னும்
கொடி - கொடிபோன்ற ஒரு பெண்
ஆட - நடிக்க
ஓர் - ஒரு
கூத்து - நடனத்தையும்
கண்டான் - (நளன்) கண்டான்.

விரிவுரை:—கோபம் வந்தவர்கள் தம் புருவத்தை நெறித்து ஏற்றுவதும் இறக்குவதும் இயல்பு. தமயந்தியின் புருவம் அவ்வாறு ஆடியதைக் கவி இந்தச் செய்யுளில் வருணிக்கின்றார். வாள்களை வைத்துக்கொண்டு நடிக்கும் நங்கைக்கு மதங்கி என்று பெயர். தமயந்தியின்புருவம் இங்கு இத்தகைய மதங்கியாகஉருவகம் செய்யப்பட்டிருக்கின்றது. 'வேல்படையும் வாளுமே கண்ணு' என்று முன் வந்திருக்கின்றபடி (143-வது பக்கம்) கண்ணைக் கூரிய வாளிற்கு நிகராகக் கூறுவது மரபு. கண்ணிற்குமேலே புருவம் நிமிர்ந்தும் வளைந்தும் ஆடியதால், வாளின்மீது நடிக்கின்ற மதங்கியாக அதனைக் கூறினார். இந்த நடனம் நிகழ்கின்ற இடம்தமயந்தியின் முகமாதலால் அம்முகம் நடனமேடை ஆயிற்று.

துடித்த புருவத்தளாய்க் கோபத்தோடு அகன்று நிற்கின்ற தமயந்தியை நளன் கண்டான், என்பது இச்செய்யுளின் கருத்து.

இவளுற்ற கோபத்திற்குக் காரணம் ஒன்றும் இல்லையென்று எடுத்துக்காட்டப் புகுந்திலன் நளன். மாதர்பால் அது பயன்படாது. கன்னியர்தம் வேட்கையே போலும் என்றது, நாம் கொண்டபடி கவியின் கருத்தேயாயின் ஊடலுக்குக் காரணமும் இவன் உணர்ந்திரான். நாங்கள் என்ற பன்மையால் அவள் ஊடினுள் என்று ஒருவாறு இவன் ஊகித்திருக்கலாமாயினும் அதைப்பற்றி மேன்மேலும் பலபேசுவது பயனில்லாததோடு இங்குப் பொருத்தமுடையதுமாகாது. ஆதலால் பிழையொன்றும் இழைத்திலனுயினும் பொறுத்தி எனப் பணிவதே கடனென நினைத்தான். இலங்கியங்களில் ஆடவர் அனைவரும் ஊடலைத் தீர்ப்பதற்கு இம்முறையையே கையாள்கின்றனர். பாவையர் கைதீண்டவும் பணிவர், தீண்டாது பிணங்கினுலும் பணிவர் புருடர். அவ்வாறு நளன் பணியத் தமயந்தியின் சினம் மாறுவதை அடுத்த செய்யுள் கூறுகின்றது.

—

சில்லரிக் கிண்கிணிமென் றெய்வமலர்ச் சீறடியைத்
தொல்லை மணிமுடிமேற் சூட்டினான்—வல்லை
முழுநீலக் கோதை முகத்தே மலர்ந்த
செழுநீல மாறுச் சிவப்பு. 22.

பதப்பிரிவு:—சில் அரி கிண்கிணி மென் தெய்வம் மலர் சிறு அடியை தொல்லை மணி முடிமேல் சூட்டினான் வல்லை முழு நீலம் கோதை முகத்தே மலர்ந்த செழு நீலம் மாறு சிவப்பு.

அன்வயம்:—சில் அரிக் கிண்கிணி மென் தெய்வ மலர்ச் சிறு அடியைத் தொல்லை மணி முடிமேற் சூட்டினான். வல்லை, முழுநீலக் கோதை முகத்தே, செழு நீலம், சிவப்புமாறு, மலர்ந்த.

பதவுரை.

சில் - ஆரவாரம் செய்கின்ற
அரி - பருக்கைக் கற்களையுடைய
கிண்கிணி - சலங்கைகட்டிய
மெல் - மிருதுவான
தெய்வமலர் - தாமரைமலர்போன்ற
சிறு - சிறிய
அடியை - (தமயந்தியின்) பாதத்தை
தொல்லை - தன் குலத்திலே தொன்றுதொட்டு வருகின்ற
மணி - அழகிய
முடிமேல் - கிரீடத்தின்மேல்
சூட்டினான் - (நளன்) அணிந்துகொண்டான்
வல்லை - உடனே
முழு - முழுவதும்
நீலம் - கரியதான
கோதை - கூந்தலையுடைய தமயந்தியின்
முகத்தே - முகத்திலே
செழு - செழுமையான
நீலம் - நீலோற்பலம்போன்ற கண்கள்
சிவப்பு - (கோபத்தால் சிவந்த) சிவப்பானது
மாறு - மாறி
மலர்ந்த - மலர்ந்தன.

கருத்து:—நளன் தன்னைப் பணிந்தவுடன் தமயந்தி கோபம் மாறி அவனை இனிதுநோக்கினுள்.

விளக்கம்:—தமயந்தியின், ஒலிக்கின்ற பருக்கைக் கற்கள் செறிந்த சலங்கைகட்டிய மிருதுவான தாமரை மலர்போன்ற சிறிய அடியைத் தன் பழமையான

அழகிய கிரீடத்தின்மேல் நளன் சூட்டிக்கொண்டதும் என்ன நிகழ்ந்தது? மலர்ந்த-மலர்ந்தன. எவை மலர்ந்தன? நீலம் - நீலோற்பலம் போன்ற கண்கள். எப்படிப்பட்ட நீலம் போன்ற கண்கள்? செழுநீலம் - செழித்த நீலமலர் போன்ற கண்கள். நீலம் - என்ன செய்து மலர்ந்தன? மாறு மலர்ந்த - மாறி மலர்ந்தன. எதுமாறி மலர்ந்தன? சிவப்பு மாறு - செந்நிறம் மாறி மலர்ந்தன. எங்கே மலர்ந்தன? முகத்தே-முகத்திலே. யார் முகத்தே? கோதை முகத்தே - கூந்தலையுடைய தமயந்தியின் முகத்திலே. எப்படிப்பட்ட கூந்தலையுடையவள்? நீலக் கோதை - கரிய கூந்தலையுடையவள். எத்தகைய கருமை? முழு நீலம் - முற்றிய கருமை.

விரிவுரை:—பாதத்தைத் தாமரை என்றதற் கேற்பச் சூட்டினான் என்றும், கண்ணை நீலோற்பலம் என்றதற் கேற்ப மலர்ந்தன வென்றும் புகழேந்தி முடிக்கின்ற நயம் கருதத்தக்கது. தம்குலத்திலே நெடுங்காலம் வழிவழி வந்த முடியைக்கொண்டு இன்று தமயந்தியின் பாதத்தில் நளன் வணங்கினான் என்று கவி விளையாட்டாகக் காட்டுகின்றார்.

குறிப்பு:—(1) மாறு, என்பது இங்கு உடன்பாட்டு வினையெச்சம். வினையெச்சத்திற்கு இவ்வுருவமும் இருப்பதை முன் (46-வது, 188-வது பக்கங்கள்) விளக்கியிருக்கிறேன்.

(2) மலர்ந்த, சாதாரணமாக இது பெயரெச்சத்தின் உருவமாயிருந்தாலும் இங்கு வினைமுற்று. மலர்ந்தன என்று வழங்குவோம். உறுப்பிலக்கணம் இன்னும் சொல்லித்தரவில்லை யாகையால் இது எப்படி வினைமுற்றாகும் என்ற சந்தேகம் வாலாம். மலர்ந்த மலர்கள் என்றபோது பெயரெச்சம். மலர்கள் மலர்ந்த, என்று மாறினால் வினைமுற்று. குதிரைகள் புல் உண்ட, பறவைகள் ஒலித் தெழுந்த, என்னுமிடங்களில் உண்ட எழுந்த என்னும் சொற்கள் வினைமுற்றே.

(3) கோதை என்பது கூந்தலைக் குறிக்காமல் அக்கூந்தலையுடைய பெண்ணிற்கு ஆனதால், ஆகுபெயர். எனின், என்ன ஆகுபெயர். கூந்தல் என்பது குணத்தின் பெயராய் அக்குணமுடைய பெயரை உணர்த்தவில்லையாதலால் குண ஆகுபெயர் அன்று. ஊர் சிரிக்கும், என்பதுபோல் இடத்தின்பெயர் அவ்விடத்திலுள்ளவர்களைக் குறிக்கவில்லை யாதலால் இட ஆகுபெயர் அன்று. 'கெண்டைக் கடை சிவப்ப' என்றதில் கெண்டை என்ற மீனின் பெயர் அம்மீன் போன்ற கண்ணை உணர்த்தியது போல், இங்குக் கூந்தல் என்பது உவமையால், கூந்தல் போன்ற பெண் என்று ஆகாததால் உவமையாகுபெய ரன்று. 'வாய்துடிப்ப' என்ற இடத்தில் வாய் என்ற முதல்பொருளின் பெயர் அதன் ஒரு பாகமான உதடுகளைக் குறித்ததுபோல், இங்குக் கூந்தல், தன்னின் ஒரு பாகம் தமயந்தி என்று குறிக்கவில்லை; ஆதலால் முதலாகுபெயரு மன்று. மற்றிது அம்முதலாகுபெயரிற்கு ஒருவிதத்தில் எதிரானசினை ஆகுபெயர். சினை என்றால் உறுப்பு அல்லது அவயவம் என்பது அர்த்தம். வாய்துடித்தது, என்ற உதாரணத்தில், பல் நாக்கு உதடு எல்லாம் சேர்ந்த வொன்றிற்கே வாய் என்ற பெயராதலால், அவ்வாய் முழுதும் துடித்ததென்று எண்ணாமல், அவ்வாயின் ஒரு உறுப்பாகிய உதடு என்னும் பொருளில் வாய் என்னும்சொல்லை ஆக்கிக்கொண்டோம். வாய், முதல்பொருள், உதடு அவ்வாயின் உறுப்பு. முதல்பொருளின் பெயர் உறுப்பைக் குறித்தபடியால் அது முதலாகுபெயராயிற்று. அவ்வாறே மான்போன்ற அழகிய கண்ணினள், என்னுங்கால், இவளுடைய கண், மானைப்போல் கொம்புகளும் புள்ளித்தோலுமாய் இருந்ததென்று யாரும் நினைக்க மாட்டார். அங்கே மான் என்ற முதற்பெயர் அதன் உறுப்பாகிய கண்ணையே குறிக்கின்றது; ஆதலால், அங்கு மான் என்றதும் முதலாகு பெயரே. இதற்குமாறாக ஒரு உறுப்பின் பெயர் முழுவதாகிய முதற்பொருளைக் குறிக்குமானால் அப்பொழுது அது சினைஆகு பெயராகும். கூந்தல் என்றது ஓர் உறுப்பு. கோதை முகத்தே, என்றபோது கூந்தலுக்கன்று முகம் இருப்பது. இங்குக் கூந்தல் என்னும் சினைப்பெயர் அதை உடைய பெண்ணைக் குறித்ததால் சினை ஆகுபெயர். வெற்றிலை நட்டான், என்றால், நட்டது இலையை அன்று. அவ்விலையை உறுப்பாகவுடைய செடியைக் குறிக்கின்றது. ஆதலால் இதுவும் சினையாகுபெயர்; முதலாகு பெயரும் சினையாகு பெயரும் ஆங்கிலத்திலே அணியாகக் கருதப்பட்டு Synecdoche என்னும் அணியில் அடங்கும். மற்ற ஆகுபெயர்கள் பெரும்பான்மை Metonymy என்னும் ஆங்கில அணியினுள் அடங்குகின்றன.

இனி, ஒன்றன்பெயர் மற்றொன்றிற்கு நேராக ஆகலாம், அல்லது அவ்வாறு ஆகிய ஆகுபெயர் இரண்டுதரம் மூன்றுதரம் மடிந்து பின்னும் மற்றொன்றின் பெயராக முடியலாம். கெண்டைக் கடை சிவப்ப நின்றாள், என்னும் உதாரணத்தில் கெண்டை என்னும் மீனின்பெயர் உவமை ஆகுபெயராகக் கண்ணை உணர்த்தியது. இந்தச் செய்யுளின் செழு நீலம் மலர்ந்தன, என்று வந்திருப்பதில் நீலம் என்னும் நிறத்தின் பெயர் பண்பாகுபெயராய் அந்நிறத்தை உடைய மலரைக்குறிக்க, மீண்டும் உவமையாகுபெயராய் அம்மலர்போன்ற கண்ணைக் குறிப்பதால், இது இருமடி ஆகுபெயர்.

(4) முழுநீலக் கோதை :—கூந்தல் கருநிறமாயிருப்பினும் அதனை நீலம் என்றது ஆச்சரியமன்று. தமிழ் இலக்கியங்களில் நீலம் பச்சை கருமை ஆகிய மூன்று நிறங்களையும் வேற்றுமையின்றி உபயோகிக்கின்றார்கள். திருமாலின் மேனியைப், "பச்சைமாமலைபோல் மேனி," என்றும், "நீலக்கிரிபோல் மேனி" யென்றும், "கார்வண்ணமேனி' என்றும் வருணிப்பதால் இவ் வேற்றுமையின்மை விளங்கும்.

அங்கைவேன் மன்ன னகல மெனுஞ்செறுவிற்
கொங்கையேர் பூட்டிக் குறுவியர்நீ—ரங்கடைத்துக்
காதல் வரம்பொழுக்கிக் காமப் பயிர்விளைத்தாள்
கோதையரின் மேலான கொம்பு. 23.

கருத்து:—ஊடல் தீர்ந்தபின் தமயந்தி நளனோடு கூடி இன்புற்றாளென்பதை இச்செய்யுள்கூறுகின்றது.

வேரி மழைதுளிக்கு மேகக் கருங்கூந்தற்
காரிகையுந் தானும்போய்க் கண்ணுற்றான்—மூரித்
திரையேற மென்கிடங்கிற் சேலேற வாளை
கரையேறுங் கங்கைக் கரை. 24.

கருத்து:—நளனுந் தமயந்தியுங் கங்கைக்கரையை அடைந்தனர்.

சூதக் கனியூற லேற்ற சுருள்வாழை
கோதி னறவேற்குங் குப்பியென—மாதரார்
ஐயுற்று நோக்கு மகன்பொழில்சென் றெய்தினான்
வையுற்ற வேற்றானை மன். 25.

கருத்து:—அவர் அங்கு ஓர் செழித்து வளர்ந்த சோலையை எய்தினர்.

வான்றோய நீண்டுயர்ந்த மாடக் கொடிநுடங்கத்
தான்றோன்று மற்றித் தடம்பதிதான்—வான்றோன்றி
வில்விளக்கே பூக்கும் விதர்ப்பநா டாளுடையா
னல்விளக்கே யெங்க ணகர். 26.

கருத்து:-மாவிந்தத்தை அடைந்து, இதுதான் தன் நகரமென்று நளன் தமயந்திக்குக் காட்டினான்.

பொய்கையும் வாசப் பொழிலு மெழிலருவிச்
செய்குன்று மாறுந் திரிந்தாடித்—தையலுட
னீரிரண்டாண் டெல்லை கழித்தா னடையலரைக்
கூறிரண்டாக் கொல்யானைக் கோ. 27.

கருத்து:—நகரை அடைந்தபின், நளனும் தமயந்தியும் பொழிலும் ஆறும் அருவியும்சேர்ந்துவிளையாடிப் பன்னிரண்டு வருடகாலம் இன்பமுற வாழ்ந்தனர்.

கோல நிறம்விளர்ப்பக் கொங்கை முகங்கருக
நீல நிறமயிர்க்கா னின்றெறிப்ப—நூலென்னத்
தோன்றாத நுண்மருங்கு றோன்றச் சுரிகுழலா
ளீன்றாள் குழவி யிரண்டு. 28.

பதப்பிரிவு:—கோலம் நிறம் விளர்ப்ப கொங்கை முகம் கருக நீல நிறம் மயிர்க்கால் நின்று எறிப்ப நூல் என்ன தோன்றாத நுண் மருங்குல் தோன்ற சுரி குழலாள் ஈன்றாள் குழவி இரண்டு.

அன்வயம்:—சுரிகுழலாள், கோலநிறம் விளர்ப்ப, கொங்கை முகங்கருக, மயிர்க்கால் நின்று நீலநிறம் எறிப்ப, நூல் என்னத் தோன்றாத நுண்மருங்குல் தோன்ற இரண்டு குழவி ஈன்றாள்.

பதவுரை.

சுரி - சுருண்ட
குழலாள் - கூந்தலையுடைய தமயந்தி, (தன்)
கோலம் - அழகிய
நிறம் - மேனியானது
விளர்ப்ப - வெளுக்கவும்,
கொங்கை - முலைகளின்
முகம் - நுனியானது
கருக - கறுக்கவும்,
மயிர் - மயிரின்
கால்நின்று - அடியிலிருந்து
நீலம்-நீலமான
நிறம் - நிறம்
எறிப்ப - வீசவும்,
நூல்என்ன-பஞ்சுநூலைப்போன்ற(நுண்ணிதாய்)
தோன்றாத - தென்படாத
நுண் - மெல்லிய
மருங்குல் - இடுப்பு
தோன்ற - தோன்றவும் (கருப்பம் முதிர்ந்து)
இரண்டு - இரண்டு
குழவி - குழந்தைகளை
ஈன்றாள் - பெற்றாள்.

விரிவுரை:—விளர்ப்ப கருக எறிப்பதோன்ற, என்னும் சொற்கள் காரியப்பொருளில் வந்த வினையெச்சங்கள். இவைகளுக்குக் காரணமாகிய 'கருப்பந்தரித்தல்' செய்யுளில் கூறப்படவில்லை யாயினும் வருவித்துக் கொண்டோம். இவைகளெல்லாம் கருப்பமுற்ற மாதர்களின் மெய்யில் தோன்றும் வேறுபாடுகள்.

முருகன் போற்றி மாலை

நூலுணர் முருகன் போற்றி
மாலைநூற் றெட்டுக் கூறக்
கோலமா முகவன் செம்பொற்
குரைகழல் காப்புத் தானே.

ஐப்பதிற் றிரட்டி யெட்டா
லணிமணி மாலை செவ்வேள்
செம்பதஞ் சூட்ட நாவின்
செல்விநல் லருள்செய் வாளே.

நூல்

கங்கையைச் சடையில் வைத்துக்
கறைமணி மிடற்றில் வைத்த
அங்கண னருளிற் றோன்று
மாகரா முருகா போற்றி. 1.

ஐவரு ளொருவ னான
அனலிசெங் கையி லேறித்
தெய்வத வாவி மேவும்
சிவசிவ முருகா போற்றி. 2.

தவமுய லறவர் மாதர்
தனித்தனி யமுத மூட்ட
அவமறுத் தவரைக் காக்கு
மாகரா முருகா போற்றி. 3.

ஆடவோ ருருவஞ் செங்கை
யறையவோ ருருவம் தாய்மார்
தேடவோ ருருவங் கொண்ட
சிவசிவ முருகா போற்றி. 4.

கைப்படு குழவி போலக்
காட்டியே அளவி லாடல்
அற்புத முறையி லாற்று
மாகரா முருகா போற்றி. 5.

வரைமகள் கொழுந னோடு
வந்தெடுத் தணைக்க வாங்கே
திருவுரு வாறு மொன்றும்
சிவசிவ முருகா போற்றி. 6.

தேறுவார் வினைகள் தீர்க்கும்
செங்கையீ ராறுஞ் செய்ய
ஆறுமா முகமுங் கொண்ட
அாகரா முருகா போற்றி. 7.

பிறையணி சடைய னார்க்கும்
பெரியநா யகிக்கு நாப்பண்
சிறுபரஞ் சுடராய் மேவும்
சிவசிவ முருகா போற்றி. 8.

செம்மைசேர் முதல்வ னாகிச்
சிறுவனைய் மறவி லாத
அம்மையோ டப்ப னாகு
மரகா முருகா போற்றி. 9.

ஆரியை யுச்சி மோந்தே
யமுதுபொன் வள்ளத் தூட்டச்
சீரிய மகிழ்வி னுண்ட
சிவசிவ முருகா போற்றி. 10.

ஒன்பது மணியிற் றோன்று
மொளிகெழு வீரர்க் கெல்லாம்
அன்புடை யண்ணா லான
அரகா முருகா போற்றி. 11.

கருவிளை யாட லோட்டிக்
கதிதருங் குழவிக் கோலத்
திருவிளை யாடல் காட்டுஞ்
சிவசிவ முருகா போற்றி. 12.

விண்டொடு கைலை ஞாங்கர்
விண்ணுயர் கந்த வெற்பில்
அண்டர்கோன் பூசை யேற்ற
அரகர முருகா போற்றி. 13.

விச்சைதேர் முனிவன் செய்த
வேள்வியி லுருத்தெ ழுந்த
செச்சையை யடக்கி யூர்ந்த
சிவசிவ முருகா போற்றி. 14.

பங்கய முதல்வன் றன்னைப்
பழமறைப் பொருள் வினவி
அங்கரஞ் சிவக்கக் குட்டும்
அரகர முருகா போற்றி. 15.

மறைமுத றெரியா யாக்க
வல்லையோ வென்று சீறிச்
சிறையிடை யயனைப் பூட்டுஞ்
சிவசிவ முருகா போற்றி. 16

கந்தமா தனத்திற் கஞ்சன்
கருமலச் செருக்கு நீங்க
அந்தமில் காலம் வைத்த
அரகர முருகா போற்றி. 17.

ஒருமுகம் நான்கு செங்கை
யுடனிருந் துலகை நாலு
திருமுகன் போலத் தந்த
சிவசிவ முருகா போற்றி. 18.

கஞ்சமே லயனை மீட்கக்
கண்ணுத லனுப்பு நந்தி
அஞ்சியே கிடவு ரைத்த
அரகா முருகா போற்றி 19.

போர்விடைப் பாகன் போந்து
போதனை விடுதி யென்னச்
சேர்சிறை செருக்கு நீக்குஞ்
சிவசிவ முருகா போற்றி. 20.

மறைமுதற் பொருளி னுட்கோள்
வல்லையோ வென்ற தாதைக்
கறைகுவன் மறையா லென்ற
அரகர முருகா போற்றி. 21.

மைப்படு கண்ணி பங்கன்
வலச்செவி சாய்க்க வங்கே
செப்பியொண் குருவாய் வந்த
சிவசிவ முருகா போற்றி. 22.

தப்பிலா வொழுக்கம் பூண்ட
தவமுனி தவழ்ந்து வேண்ட
அப்பொருள் தமிழோ டீந்த
அரகர முருகா போற்றி. 23.

சரவணத் தடத்தில் நோற்ற
தையலர் தம்மை யாங்கே
திருவருண் முறையா லுய்த்த
சிவசிவ முருகா போற்றி. 24.

கந்தமா தனத்தி னீங்கிக்
கயிலைசென் றன்னை தந்தை
அந்தளி ரடிகள் போற்று
மரகர முறுகா போற்றி. 25.

தீவினை புரியுஞ் சூரைச்
சிந்திவா னவரைக் காக்கத்
தேவர்கள் தலைவ னான
சிவசிவ முருகா போற்றி. 26.

வீரர்க ளுடனே பூத
வெள்ளமுஞ் சுரருஞ் சூழ
ஆரம ருழக்கச் சென்ற
அரகர முருகா போற்றி. 27.

குறுகிடக் குருகுக் குன்றங்
குலமுனி கூறக் கேட்டே
செருவினை விளைக்க வேவுஞ்
சிவசிவ முருகா பாற்றி. 28.

முறுகிய சினத்தி னோடும்
முன்னர்வந் தெதிர்த்த பொல்லா
அறுகுமா முகனைக் கொன்ற
அரகர முருகா போற்றி. 29.

நல்லுயி ருய்யு மாற்றால்
நக்கனைப் பூசை செய்த
செல்வனே செம்பொற் சோதி
சிவசிவ முருகா போற்றி. 30.

சுரமது கடந்து நீங்கிச்
சோதிவா னவர்க ளோடும்
அரியசீ ரலைவாய் வந்த
அரகா முருகா போற்றி. 31.

மாசுறு தொழிலில் வல்ல
மாற்றலர் சரிதை முற்றுந்
தேசிக னுரைக்கக் கேட்ட
சிவசிவ முருகா போற்றி. 32.

எந்தையெம் பெருமா னேழை
யியம்பிய பொறுத்தி யென்ற
அந்தணற் கருளைக் கூறு
மாகா முருகா போற்றி. 33.

மாவலிச் சூரன் மாட்டு
மதவலி வீர வாகு
தேவரைத் தூது போக்குஞ்
சிவசிவ முருகா போற்றி. 34.

துணிவுடன் சென்ற வீரன்
சூரன்முன் வீற்றி ருப்ப
அணிமணித் தவிசொன் றீந்த
அரகா முருகா போற்றி. 35.

வஞ்சகன் சிறையில் வைகும்
வாசவன் மகற்குத் தோன்றிச்
செஞ்சொலி னருளை நல்குஞ்
சிவசிவ முருகா போற்றி. 36.

தானவ னுளமு ணர்ந்து
தண்கடல் கடந்து மூதூர்
ஆனபா சறைகண் டுற்ற
அரகா முருகா போற்றி. 37.

நல்லொளிப் பகையை வெல்ல
ஞாட்பினில் வீர மொய்ம்பிற்
செல்வனை அருளொ டேவுஞ்
சிவசிவ முருகா போற்றி. 38.

துணிவுடன் பானு கோபன்
தொடக்கிய மாயம் மாய
அணிசுட ரயில்வே லுந்து
மரகா முருகா போற்றி. 39.

வெய்யவன் தன்னைக் கொன்ற
வீரனை வினவி வேண்டும்
செய்யபே ரன்பை யீந்த
சிவசிவ முருகா போற்றி. 40.

சமரினை யிழந்து நின்ற
சூர்முதல் தழைப்பப் பொன்னாட்
டமரரைச் சிறைநீக் கென்ற
அரகர முருகா போற்றி. 41.

மைந்தரும் படையும் மாய
வாளரி முகனை யேவச்
சிந்தியங் கவனைக் கொன்ற
சிவசிவ முருகா போற்றி. 42.

ஈடிலாச் சூர பன்ம
னெதிர்த்திடப் போர்செய் வான்போல்
ஆடலி னுடல் காட்டும்
அரகர முருகா போற்றி. 43

தாதைதன் செய்கை போலத்
தானவர் தானை முற்றும்
தீதறு சிரிப்பி னட்ட
சிவசிவ முருகா போற்றி. 44.

நம்மாழ்வார் வைபவம்

திருவாய்மொழி

[567-வது பக்கத் தொடர்ச்சி]

3-ம் பத்து, 4-ம் பதிகம்.

7-ம் பாசுரம்.

வானவ ராதி யென்கோ வானவர் தெய்வ மென்கோ
வானவர் போக மென்கோ வானவர் முற்று மென்கோ
வூனமில் செல்வமென்கோ வூனமில் சுவர்க்கமென்கோ
வூனமில் மோக்கமென்கோ வொளிமணி வண்ணனையே

வானவருடைய தாரகம் - அதாவது வானவரைப் போஷிக்கின்றவனென்று சொல்வேனோ? அவர்களின் தெய்வமென்று சொல்லுவேனோ? அவர்களால் இன்பத்தோடு அநுபவிக்கப்படுகின்றவனென்று சொல்லுவேனோ? அவர்களுக்கு ஸர்வ விதத்தாலும் உபகரிக்கிறவனென்று சொல்வேனோ? ஊனமில்லாத நிறைவான செல்வமென்று சொல்வேனோ? அவர்கள் சுவர்க்கத்தில் அநுபவிக்கும் இன்பப்பயனுக்கு உள்ளிருந்து நிர்வாஹம் செய்பவன் என்று சொல்வேனோ? அவர்களுக்கு மோக்ஷத்தைக்கொடுத்துப் புருஷார்த்த பூர்த்தி செய்கிறவனென்று சொல்வேனோ? மஹா ஒளியுள்ள என் மணிபோன்ற வடிவழகுள்ள மூர்த்தியை எவ்வண்ணம் சொன்னால் அவன் புகழுக்கு ஏற்கும்?

8-ம் பாசுரம்.

ஒளிமணி வண்ண னென்கோ
வொருவனென் றேத்த நின்ற
நளிர்மதிச் சடைய னென்கோ
நான்முகக் கடவு ளென்கோ
அளிமகிழ்ந் துலக மெல்லாம்
படைத்தவை யேத்த நின்ற
களிமலர்த் துளவ னெம்மான்
கண்ணனை மாய னையே.

குறிப்புக்கள்:—ஒருவனென்று ஏத்தநின்ற நளிர் மதிச்சடையன்- "ஏக ஏவ ருத்திர:" என்று வேதமே புகழும்படி நிற்கின்ற பிறை சூடிய பரமசிவன். அக மகிழ்ந்து - கிருபை செய்து ரக்ஷிப்பதிலேயே உற்சாகம் வைத்து. களிமலர்த் துளவன் - துளபமாலைகள் மதுயுக்தமாய் வாசனை வீசியது.

உரை:—உலகமெல்லாம் படைத்து அந்த உலகங்களுக்குத் தன் ரக்ஷணத்தால் உற்சாகம் செய்விப்பவன் என்று பெயர்பெற்றவ னென்பேனோ? சிவபெருமானென்பேனோ? சதுர்முகக்கடவு ளென்பேனோ? ஒளிமணிச் சுபாவமுடையோ னென்பேனோ? எங்ஙனே சொல்வேன்.

9-ம் பாசுரம்.

கண்ணனை மாயன் றன்னைக்
கடல்கடைந் தமுதங் கொண்ட
வண்ணலை யச்சு தனை
யனந்தனை யனந்தன் றன்மேல்

நண்ணிநன் குறைகின் றானை
ஞாலமுண் டுமிழ்ந்த மாலை
யெண்ணுமா றறிய மாட்டேன்
யாவையும் யவருந் தானே.

உரை:—எல்லா மானிடரும் சுலபமாய்த் தன்னைக்கிட்டும்படியாய்க் கிருஷ்ணனுயவதரித்து ஆச்சரியமான சேஷ்டைகளாலே உலகத்தாரைக் களிப்பித்து அனந்தாழ்வாரைப் போன்ற நல்ல பக்தர்களைக் கைவிடாதே தன் பக்கத்திலேயே நிறுத்தி அவர்மேல் பற்றுக் கொண்டு எல்லாப் பிராணிகளும் உய்தல்பொருட்டு யுகாந்திர பிரளயத்தில் உலகத்தை விழுங்கிப் பக்தர்களிடத்தில் மிக ஆசையுடையவனுய் ஸர்வலோக பரிபாலகனுயிருக்கும் எம்பெருமானை உற்றபடி நினைக்க வேண்டிய பிரகாரங்களை நான் அறியமாட்டேன். ஏனெனில் "யாவையும்" எல்லா அசையாப் பொருள்களும் அவனே "யாவரும்" எல்லா அசையும்பொருள்களும் அதாவது சேதனு சேதன ஸர்வ வஸ்துக்களும், "தானே"—அவனல்லவோ?

10-ம் பாசுரம்.

யாவையும் யவருந் தானு யவரவர் சமயந் தோறும்
தோய்விலன் புலனைந்துக்குஞ் சொலப்படா னுணர்வின் [மூர்த்தி
ஆவிசே ருயிரு னுள்ளா லாதுமோர் பற்றில் லாத
பாவனை யதனைக் கூடி லவனையுங் கூட லாமே.

புலன் ஐந்துக்கும் சொலப்படான் - இந்திரயங்கள் ஐந்துக்கும் விஷயமாகச் சொல்லக்கூடியவ னல்லாத, உணர்வின் மூர்த்தி - ஞான ஸ்வரூபன். யாவையும் யவருந்தானுய் - ஸர்வ சேதன அசேதன வஸ்துக்களாயிருந்து, அவரவர் சமயந்தோறும் - அந்தந்தச் சேதனர்கள்ஸுகதுக்காதி அவஸ்தைகள் தோறும் (இங்குச் சேதனர்களை மாத்திரம் குறிப்பிட்டாலும் அசேதனங்களின் மாறுபடு தசைகளையும் இது குறிக்கிறதாகக் கொள்ளவேண்டும்) தோய்விலன் - சங்கம் அதாவது 'ஒட்டுதல்' இல்லாதவன். ஆவி சேர்-சரீரத்தில் அகப்பட்ட, உயிரினுள் - ஆத்மாவிடத்திலே, ஆல் - அசை. ஆதுமோர் பற்றில்லாத - ஒருவித சங்கமுமில்லாத, பாவனை - புத்தியால் உணரப்பெற்ற அநுமான தத்துவம், அதனை - அந்த ஆத்மசுவரூபத்தை (சமுதாய ஆத்ம சுயரூபத்தைச் சொன்ன படியால் "அவனை" என்றபிரயோகத்துக்குப் பதிலாக 'அதனை' என்று உபயோகித்தபடி) கூடில் - கூடுமாகில் - கிட்டுமாகில்' அவனையும்-பரமாத்மாவுக்கும் சித் அசித் தோஷ ஸங்கம் ஒட்டுதல் இல்லை என்ற நிர்ணயம், கிட்டலாமே-நிர்ணயிக்க யாதொரு ஆக்ஷேபமு மில்லை.

குறிப்பு:—எல்லா வஸ்துக்களோடும் அந்தர்ப் பூதனுயிருந்தானே ஆயினும் பரமாத்மாவுக்கு அவைகளின் தோஷங்கள் தட்டவில்லை என்று உதாஹரணபூர்வமாய்த் தத்துவத்தை அறுதி இடுகின்றார். அது எப்படியெனில், ஒவ்வொருவனுடையஸுகதுக்கங்களும் அவஸ்தா விசேஷங்கள் அவனவனின் உள்ளே கிடக்கும் ஆத்மவஸ்துவைத் தடைப்படுத்திச் சரீரக்குறைகளின் நிர்ப்பந்தங்கள் அந்த அந்த ஆத்மாவைப்பீடிக்காததை அவர் அவர் உணர்வில் அறிகின்றோ மல்லவா? இதே திருஷ்டாந்தத்தைக் கொண்டு பரமாத்மாவுக்கு அந்த அந்த ஆத்மாவின் புண்ணியம் பரிபக்குவங்களால் கிடைத்திருக்கிற சுகதுக்காதி தோஷங்கள் தட்டுப்படுத்தாதென்று ஊஹிக்க யாதொரு தர்க்கபாதகமு மில்லை என்று இப்பாசுரத்தில் அருளிச் செய்கின்றார். வேதத்தில் ஒரு அநுவாதத்தில், "யாவன் உளுந்திலிருப்பானே அவன் அது அல்லாதவன்" என்று சொல்லி முடித்த தத்துவத்தின் அகக்கருத்தை நம்மாழ்வார் திருஷ்டாந்த பூர்வமாக நமக்குத் தெளிவுபெற உபதேசிக்கின்றார்.

11-ம் பாசுரம்.

கூடிவண்டறையுந் தண்டார்க் கொண்டல்போல் வண் [ணன் றன்னை
மாடலர்பொழில் குருகூர் வண்சட கோபன் சொன்ன
பாடலோ ராயி ரத்து ளிவையுமோர் பத்தும் வல்லார்
வீடிலபோக மெய்தி விரும்புவ ரமரர் மொய்த்தே.

பதக்குறிப்புக்கள்:—அறைகை - சப்தம் செய்கை. தண்தார் - சீதளமான மாலை, கொண்டல்போல் வண்ணன் - கார்மேகம்போன்ற வர்ணமுடையவன், வீடு இல் - இடைவீடு இல்லாத, அமரர் மொய்த்து விரும்புவர் - அமரராலே சூழப்பட்டு அநுபாவியமான புருஷர்கள் ஆவார், இத் திருவாய்மொழி வல்லார் சர்வகாலமும் பகவத் கைங்கரியத்தைப்பெற்று அநுபவிக்கும் அயர்வற்றஅமரர்களுக்கு வெகுபிரியமாவார்கள்-ஆறாயிரபடி-சுருக்கம்.

எல்லாம் வீணே?

ஒரு சிறு ஈரங்க நாடகம்

[569-வது பக்கத் தொடர்ச்சி]

சீனு:—ஐயோ! உன் பிரசங்கத்தை உலகமெல்லாம் கேட்பதுபோல் பாவிக்க ரேடியோ, இல்லையே.

மீனு:—வாயை மூடிக்கொண்டு கேள்.

திரு:—இனி, மானுடர்களுள் சிறந்த மானுடரேயாயினும் அவரிடத்தில் தெய்வாம்சம் சிறிதுமில்லை. ஆகையால் சாதாரண மானுஷ்ய சாபல்யங்களுக்கு ஆளாகிச் சுயகாரிய சித்தியின்பொருட்டு வாலியை வதை செய்தாரேயன்றி ஸ்ரீமன் நாராயணனுகச் செய்த காரியமன்று அது. இராவணனை விடவா துஷ்டன், வாலி? நிராயுத பாணியான இராவணனை ஒரு பாணத்திற் கிரையாக்காமல் "இன்றைக்குப் போ நாளைக்கு வா" என்ற கிருபாவள்ளலா வாலியின் மீது இப்படிப் பதுங்கிப் பாயவேண்டும். இம்முரண் ஏனெனில் இலங்கைக்குச் சென்றதும் சீதைக்கு, அதாவது சக்திக்கு, வெகு அருகாய் விடவே அவரது தெய்விகத் தன்மைகளெல்லாம் மறுபடி துளிர்த்தன.

சீனு:—இத்தத்வார்த்தங்களெல்லாம் எங்கிருந்து திருடியதோ? கலாநிலயத்தி லிருந்தா?

திரு:—இல்லை. படிக்கும்போதே கம்பருடைய தாத்

பரியம் இதுவாய்த்தான் இருக்கவேண்டுமென்பது எனக்கே தோன்றிற்று. இதற்குப் பாலகாண்டத்திலிருந்தும் ஒரு சாட்சி காட்டுகிறேன் பார். மிதிலைக்காட்சிப் படலத்தில் முதல்முதல் ஸ்ரீராமரும் சீதையும் ஒருவரையொருவர் கண்ணுற்றதும் ஒருவரிதையத்தை ஒருவர் அடைந்தார் என்று சொல்லிவிட்டுக் கம்பர் அடுத்த பாசுரத்தில் ஸ்ரீராமரை 'வசையில் ஐயன்' என்றழைக்கின்றார். அதாவது, சக்தி வந்து குடிகொண்டதும் தசரத புத்திரனுயிருந்த இராமர் தன் பழைய தெய்விகத்தன்மையைப் பெற்றார் என்பது இவ் "வசையில் ஐயன்" என்பதால் விளங்குகின்றது. கம்பர் குறளைத் தழுவி அனேக விஷயங்கள் உரைத்துள்ளார் என்பதற்குச் சந்தேகமில்லை. இவ்வுலகில் குணம் மாத்திர முடையவர் இல்லையாகையால் ஒருவரை மதிக்க,

"குணம்நாடிக் குற்றமு நாடி யவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல்"

என்று வள்ளுவர் விதித்திருக்கின்றனர். எவ்வளவு சிறந்த குணவிசேஷங்கள் பொருந்தியவனுயினும் மானுடனேயாயின் அவனிடம் ஓர் அணுவேனும் குற்றம் இல்லாமற் போகாது என்பது வள்ளுவருடைய தாத்பரியம். கம்பர் இக்குறட்பாவிற்குப் புறநடையாய் இராமரை, "வசையில் ஐயன்" என்றழைக்கின்றார். இராமருக்கு அவ்வணுக் குற்றம் கூட இல்லை என்பதைக் காட்டுவதினால் அவர் பூலோகத்தைச் சேர்ந்தவரல்லர் என்பதுதொனிக்கக் காட்டிச் சீதாபிராட்டியைக் கண்ணுற்ற பிறகே அவருக்கு அத்தேவதாம்சம் சித்தியாயிற்று என்பதற் கடையாளமாய்ப் பிராட்டியைக் கண்ணுற்ற பிறகே இராமரை, "வசையில் ஐயன்" என்று வாயார அழைக்கின்றார். சுருங்கச் சொல்லின், மஹாவிஷ்ணுவின் அவதாரமே யாயினும் கருங்கடல் பள்ளியில் கலவிநீங்கியதுமுதல்இராமரது தெய்வத் தன்மை அவரைவிட்டுப் பிரிந்திருந்ததென்றும், பிறகு சீதையைக் கண்ணுற்றதுமுதல் அத்தெய்வாம்சம்வந்தடைந்து, சீதையைப் பிரிந்ததும் அத்தெய்வாம்சத்தை யிழந்து அதன் பயனாய்ச் செய்கை திகைத்து வாலியைக் கொன்று, பிறகு இலங்கைக்குச் சென்றபோது, சக்தியின் சமீபமாகவே அத்தெய்வாம்சம் மறுஜனனமாகி அரக்கர்பால் அவ்வசாதாரண கருணையும் காட்டத் தூண்டிற்று. சக்திஸ்வரூபமாகிய ஸ்திரீகளின் பெருமையைக் கம்பர் இவ்வாறு இடையில் காட்டி இருக்கின்றார். ஆகையால் மூர்த்தி...

சீனு:—ஆகையால்-நான் நாளையதினம் பட்டினம் போய்ச் சக்ரபாணிஐயர் பெண்ணைக் கலியாணம் செய்து பிறகு ஒரு இராவணனைத் தேடிப் பிடித்து அவளைத் தூக்கிப்போகச் சொல்லி—பிறகு வாலியொருவனைத் தேடி அவனைக் கொன்று—அப்பா! எத்தனை காரியங்கள் இருக்கின்றன!

மீனாக்ஷி:—ஆமாம், சீனு சொன்னதுபோல் இவைகளை யெல்லாம் நான் கலாநிலயத்தில் எங்கேயோ படித்திருக்கின்ற ஞாபகம் வருகிறதே..

சீனு:—அதனாலென்ன. நம் திருநாவுக்கரசு அங்கிருந்து திருடித் தன் கருத்துப்போல் பேசுகிறான் என்று சொல்லப்படாது. அதில் எழுதினவரும் இவனும் ஒரே விதமாக எண்ணியிருக்கிறார்கள். அவர் முதலிலே எழுதிவிட்டார் இவன் பின்னாற் பேசுகின்றான். இதுதான் வித்தியாசம்.

மீனாக்ஷி:—கிடக்கட்டும், இப்பொழுது இவைகளெல்லாம் சொன்னது எதற்காக?

சீனு:—உன் மகிமையை நீ அப்பாவினிடத்தில் நன்றாய்த் தெரியக் காட்டவேண்டுமென்பதற்காக!

திரு:—உனக்குத் தெரிந்தவைகளை நீ இவ்வாறுதான் துஷ்பிரயோசனம் பண்ணுகிறாய். நான் சொல்ல வந்தது வேறு. ஜநசமூகச் சீர்திருத்தம் என்று ஒரு பேர் வைத்துக்கொண்டு நீயே யறியாதவைகளை மற்றவர்களுக்குப் போதிக்காதே. பற்பலதேச சரித்திரங்களையும், முக்கியமாய்ப் பல பாஷைக் காவியங்களையும் சிறிதேனும் படித்திருப்பவர் தெய்விக விவாகத்தைப் பத்திரிகையில் விளம்பரம் செய்து கடைத்தெருவியாபாரமாக்குவார்களோ. படிக்காதவர்கள் வரதட்சணைக்குப் பேரம் செய்வதை இகழ்பவர்களன்றோ இத்தகைய காரியம் செய்கின்றனர். அன்னியனைச் சீர்திருத்தத் தலைப்படுவதே அதிகப்பிரசங்கித்தனத்தின் அறிகுறியாம். முதலாவது சீர்திருத்தப் புகுவோனே திருந்தியிருக்கிறான் என்பதற்கு என்ன சாட்சி!

சீனு:—ஆகையால்—மற்றவர்கள் எக்கேடு கெட்டும், நீ உன் வேலையைப் பார்த்துக்கொண்டு சுயநயச்சவரூபமாயிரு, என்பது உனது மதம்.

மீனு:—அது அன்று. நீ யுனது அபிப்பிராயங்களையும் கோட்பாடுகளையும் மற்றவர்களுக்குள் துறுத்தவேண்டாம். ஆழ அமர்ந்து ஆராயாமல் புராதன மதாசார குலாசார தேசாசாரங்களைக் கைசோர விடவேண்டாம்—ஐயோ, பூவுடன் சேர்ந்த நாரும் மணம்பெற்றதாம் என்பதைப்போல் நானும் என்னவோ இலக்கணமாய்ப் பேசிப்பார்க்கிறேனே!

திரு:—உங்களை விளையாட்டாக அக்ராசநாதிபதிஎன்றழைத்ததற்கேற்ப நான் இவ்வளவு நேரம் பேசியதன் கருத்தை இரண்டொரு வாக்கியங்களில் அடக்கிவிட்டீர்கள். ஸ்திரீகளின் நுண்ணறிவு சிறந்தது. நான் சொல்வதிது. ஆண் பெண் இருபாலர்க்கிடையிலும் கல்வியை நம்மா லான அளவு பரவச்செய்வது நமது கடமை, நாம் செய்யக்கூடிய பரிசுத்தப் பேருபகாரம். பிறகு அவரவர்கள் தங்கள் தங்கள் கல்வியைப் பல துறைகளில் பெருக்கி ஒவ்வொரு விஷயத்தின் குறை குணங்களையும் சீர்தூக்கித் தங்களுக்கு ஏற்றவாறு அமைத்துக் கொள்ளவேண்டும்.

சீனு:—(பரிகாசமாக) நண்பர்களே, ம-ா-ா-ஸ்ரீ, திருநாவுக்கரசுப் பிள்ளையவர்கள் செய்த இந்தச் சிறந்த உபன்யாசத்தை நாமெல்லாரும் வெகு களிப்புடன்

(விசாலம் ஓடி வருகிறாள்)

விசாலம்:—அம்மா, தந்தி, தந்தி வந்திருக்கின்றது.

(கோதண்டராமஐயர் கையில் தந்தியுடன் வருகிறார்)

கோதண்:—சக்ரபாணி ஐயர், பெண்ணை அழைத்துக்கொண்டு தானே நாளை மெயிலில் வந்து சேர்வதாக இது பண்ணி யிருக்கிறார்.

சீனு:—நான் பிழைத்தேன். இந்த உலகத்தில் சுகதுக்கம் மாறிமாறித்தான் வருகின்றது. இந்த உபன்யாசம் கேட்ட சிரமத்திற்குப் பதிலாய் நான் பட்ட

ணம்போய் அயலார்வீட்டில் பெண்ணைப்பார்க்கிற கஷ்டம் நீங்கியதே !

திரு:—என்ன சொன்னாய்?

சீனு:—இல்லை, இல்லை-மன்னிப்பு.

(சீனுவாசமூர்த்தி தவிர மற்றெல்லாரும் போகிறார்கள்)

சீனு:—நாளைக்கு வருகிறார்கள். நான் என்ன பண்ணுவேன். அந்தப்பெண்ணைக்கண்டால் எனக்குச்சுத்தமாய்ப் பிடிக்கப்போவது இல்லை. (கண்ணாடியண்டை போகிறான்) அது எப்படி இருக்கோ? முழு அசடாயிருக்கலாம். பேசிப் பார்த்தாலல்லவோ தெரியும். நானே மெள்ளப் பேசிப்பார்க்கட்டுமோ. திடீரென்று என்னத்தைப்பேசுகின்றது. மூஞ்சியை மூஞ்சியைப் பார்த்துக்கொண்டு நிற்கவேண்டியதுதான்-இல்லை, இல்லை, பேசித்தான் பார்க்கிறேன். இருந்தால்தான் என்ன, இதை எல்லாம் நான் கலியாணம் பண்ணிக்கொள்ளப் போவதே இல்லை. இந்தத்திருநாவுக்கரசுதான் எனக்கு நன்றாய் உருவேற்றிவைத்திருக்கிறான். நான் பழகினவர்களுள் அவனைவ்வளவு பல விஷயங்கள் கற்றும் அநுபவத்திலும் அறிந்தவர்களில்லை. இத்தனை அயல்விஷயங்கள் படித்துக்கொண்டே பரிட்சைகளும் எப்படியோ முதல் வகுப்பில் தேறிவிடுகின்றானே !—நல்லது நாளை இந்நேரம்........

(போகிறான்)

பெனிடிக்ட் டி ஸ்பைனோஸா

[572-வது பக்கத் தொடர்ச்சி]

முடிவுரை:—ஜடம், ஜீவன், சித் அசித் என்பன இயைபற்ற தனிப்பொருள்களல்ல. ஒரு பக்கத்தில், நோக்கி விசாரித்துப்பார்த்து அறியும் சித்துக்களும் (Thinking Beings) மற்றொருபக்கத்தில் காட்சிப் பொருள்களுமாகப் (Extended Beings) பிரிந்து நிற்பன என்பதுதெரியலாகும். ஆனால்,உலகாதிகளைச் சித்திலும், பிரிவு அல்லது தோற்றத்திலும், அடக்கித் தன்னை அறிவிப்பது மூலவஸ்து எனக்கொள்ளுதலே உண்மையாகும். இவ்வாறாயின், அவ்விருதிறக் குணதிசயங்களும் ஒன்றை மற்றது சார்பாகக்கொண்டும் தொடர்ந்தும், ஒன்று மற்றதைக் கண்டித்தும், ஒன்று மற்றதுடன் இணங்கியும் இயங்குவன என்பது தெளிவாகின்றது.

அவ்விருதிறக் குணதிசயங்களின் வாயிலாகப் பரம்பொருள் விளங்குகின்றதென்பதை ஸ்பைனோஸா ஒத்துக்கொண்டபோதிலும், அவைகள் ஒன்று மற்றதால் கண்டிக்கப்படாமல் தன்னந்தனியாய் அவ்வதன் இயல்பிற்குரிய வழியை யநுசரித்து இயங்குவனஎனக் காட்டியிருக்கின்றனர்.

"நிரந்தர அனந்த வஸ்துக்கள் பலவாக எவ்வாறு இருக்கக்கூடுமோ? பாவித்தற்கு மாகாத இவ்விபரீதக் கொள்கை அத்வைத வாதத்தை மறுப்பதில்லையோ?" எனச் சிலர் கேட்கலாம். இவ்விபரீதத்தைப் பின்வருமாறு தெளிவிக்க இவர் முயற்சித்திருக்கின்றனர்:—"மூலவஸ்துவுக்கு அப்பாலாய் அந்தக் குணங்கள் நிரந்தரமாய் அகண்டிதமாய்த் தன்னந்தனியாய் நிற்பனவென்பது தெளிவாகும்; ஆனால்அதனைதைப் பொறுத்தவரையிலும் அனந்தமானதெனவும், அவ்விரண்டும் மூலவஸ்துவுட் படிந்தேனும் இணங்கியேனும் கிடப்பனவாகாமல், மூலவஸ்துவால் இயைக்கப்பட்டுள்ளனவெனவும், அம் மூலவஸ்து அவ்விரண்டிலும் சமமாகப் பூரித்துளதெனவும் கொள்வோமாயின் ஆக்ஷேபத்திற்கிடமில்லை போலும். ஊன்றி விசாரிப்போமாயின், அவ்விருதிறக் குணங்களும் மூலவஸ்துவில் வேற்றுமைகளற்றுக் கிடப்பன; அம் மூலவஸ்துவானது ஒரேசமயத்தில் ஞாதுருவாகவும் ஞானமாகவும் ஞேயமாகவும் விரிந்தும் இயைந்தும் விளங்குவதாகும்" எனவும் விளங்கிக் காட்டியிருக்கின்றனர். இன்னும், அதிதீர்க்கமாக நாம் ஆலோசித்துப் பார்ப்போமானால், உண்மையில், மூலவஸ்துவானது குணங்களற்றது, கேவல சத்தாகும் (Pure Being); இக்கேவலசத்துத்தான் உனது குணங்களும் பிரபஞ்சமும் பிரபஞ்சாதிகளும் மனோபாவனையாகிய கற்பனைகளும் போலும்"

திருக் (Consciousness) திருசியம் (Objects of Consciousness) சேதனம் அசேதனம் அல்லது சித் அசித் எனப் பிரித்து ஆராய்தலினின்று தான் மூலவஸ்துவைப் பற்றிய மெய்யறிவு தெளிவாகும். திருசியத்தை, அசேதனத்தை, அசித்தை விளக்குவது திருக், சேதனம், அல்லது சித்தாகும் ; பின்னதை நிரூபித்து நிலைநிறுத்துவது முன்னதாகும்; அதாவது, இவைகளிலேதேனுமொன்றின் உதவியினாற்றான் மற்றதை நாம் அறியமுடியும்; ஒன்று இல்லையாயின் மற்றதும் இல்லாமற்போம்; ஒன்றைக் கூர்ந்து பார்க்கையில் மற்றதும் உணரப்படுகின்றது; சுருக்கத்தில், அவ்விரண்டும் பிரிக்கக்கூடாவண்ணம் பிணைந்து நிற்பன. ஆதலால், தோற்றங்களை, புறப்பொருள்களை, அல்லது திருசியத்தைப் பொய்யென ஒதுக்குவோமாயின், சேதனம் திருக் அல்லது சித்தையும் மறுத்து ஒதுக்கவேண்டும். பலகையின் இருபுறங்கள் போலும், கழியின் இருமுனைகள் போலும், அவ்விரண்டும் தொடர்ந்து இணங்கி விளங்குவன. இவ்வுண்மைகளை ஸ்பைனோஸா அங்கீகரித்தபோதிலும், அதே சமயத்தில், அவைகள், தனித்து இணக்கமற்று அவ்வதன்வழிச்செல்வன எனக் காட்டியிருக்கின்றனர். இவ்வாறு ஒன்றற்கொன்று முரணான கொள்கைகளின் பொருள் என்னையோ ? அக்குணங்களின் வேற்றுமையைக் கரைத்துப் பரஸ்பர ஒற்றுமையை ஸ்தாபித்தாற்றான் "சர்வமும் ஏகமயம்" என்ற கொள்கையை உறுதிப்படுத்துதற்கியலும். அவ்வாறு செய்யாது, மூலவஸ்து குணங்களற்றதெனவும், கேவலச் சத், அதாவது வெறும் சூன்யம் (Pure nothing) எனவும் பலவாறு முடித்தனர். குணங்களில்லையெனும்பொழுது, முதலில் அவைகள் இருந்தன என்ற பாவனை உண்டாகிறதன்றோ ? விதி விலக்கு வழிகள் ஒன்றையொன்று முன்னும் பின்னுமாகக் குறிப்பிப்பனவன்றோ ? உளது இலது என்பவைகளும் குணங்களுக்குட்பட்டனவன்றோ ?

குன்றுடையானும் மக்களும்

இரண்டாம் புத்தகம் — 4. பன்றிப்போர்

[570-வது பக்கத் தொடர்ச்சி]

மூளிநாய் சின்னண்ணன் பக்கலில் வந்துநின்று அந்தப் பன்றியை உற்றுப்பார்த்தது. பன்றி, 'ஓ ஓ! மூளி, நீ யென்னைக் கொல்லவந்தாயா?' என்று அந் நாயைக் குறும்பார்வை பார்த்துச் சிறிது உறுமிற்று. மூளிநாய், 'நான் ஆதியிலேமூளி, நீ இடையிலே மூளி' என்று ஆர்ப்பரித்துப் பன்றியின்மேற் பாய்ந்து, ஒரு காதைப்பிய்த்து,அதற்கு எதிரே உட்கார்ந்துகொண்டு 'இப்பொழுது நீ ஒருகாது மூளி' என்று குரைத்தது. பன்றி தன் முன்னங்காலால் தடவிப்பார்த்து ஒரு காது பிய்ந்துபோனதை யுணர்ந்து,' ஆனாலுமென்ன, நீ இருகாது மூளி, நான் ஒருகாது மூளி' என்று உறுமிற்று. அதைக்கேட்ட மாத்திரத்தில் மூளிநாய் முன்னும் பின்னும் பாய்ந்து பன்றியின் மற்றொரு காதையும் பிய்த்து, அதற்கு எதிரில் உட்கார்ந்து, 'நீ ஒருகாது மூளியா, இருகாது மூளியா, நன்றாய்ப் பார்" என்று இகழ்ச்சிசெய்தது. பன்றியும் தன் முன்னங்காலால் தடவிப்பார்த்து மற்றொருகாதும் போனதை யுணர்ந்து,வெட்கி,இனி அவ்விடத்தில் இருந்தால் தன்னுயிருக்குக் கேடுவரும் என்பதையறிந்து,ஓடிப்பிழைக்கவேண்டும் என எண்ணி, சரேலென எழுந்து காட்டிற் பாய்ந்து ஓடலாயிற்று. மூளி நாய் விடாமற் பின்தொடர்ந்து அதன்மேல் வாய்வைத்துச் சென்றது.

பன்றி நெடுந்தூரம் ஓடி யொரு மலைச்சந்திற்குள் புகுந்தது. புகும் வேளையில் பின்றொடர்ந்த மூளிநாய் பன்றி யோடி ஒளிந்துகொள்ளுமென்றெண்ணி அதன் புறங்காலை வாயாற் கவ்விக்கொண்டு வலதுபுறம் ஒரு பாறையின்மேற் சாய்ந்துநின்று இழுத்தது. பன்றி முன் பின் போகமுடியாமல் அங்கொரு பாறையிடுக்கில் கொம்பைச் சிக்கவைத்துத் தலைகவிழ்த்து, கண்களை மூடி நின்று வீறிட்டது. வீறிட்ட ஓசைகேட்டுச் சின்னண்ணன் ஓடிவந்து, நாய் சாய்ந்துநின்ற பாறையின்மீது ஏறிநின்று, வேல்கொண்டு குலவையிட்டுப் பன்றியைக் குத்தினான். அவ்வேல் பன்றியின் உடம்பைத் துளைத்துக் கீழே இருந்த பாறையில் ஏழு முழம் பாய்தலும், பன்றி 'வீரதங்காளுக்கபயம் ! வீர தங்காளுக்கபயம் !' என்று சொல்வதுபோல் வீறிட்டு உயிர் துறந்தது.

சின்னண்ணன் பாறையினின்றும் கீழே குதித்து அங்கு வந்துசேர்ந்த சாம்பானைநோக்கி 'வேலைப் பிடுங்கிப் பன்றியை இறக்கிவா' என்று பணித்து, பெரியண்ணனையும் மைத்துனரையும் மூளிநாயையும் அழைத்துக்கொண்டு பன்றி குத்திய கணவாய்க்கு எதிர்ப்புறத்தில் இருந்த ஒரு சோலையை அடைந்தான். பின்தொடர்ந்த வேட்டைக்காரரும் போர்வீரரும் அச்சோலையிலே தங்கி இளைப்பாறினர். அண்ணன்மாரும் மைத்துனரும் தமது காரியம் நிறைவேறிற்றென்று மகிழ்ச்சியுற்று மரநிழலில் தங்கிச் சிரித்துப் பேசிக்கொண்டிருந்தனர்.

சின்னண்ணன் பாய்ச்சிய வேலினை வீரசாம்பான் மெல்ல மெல்ல அசைத்து மேலே எடுத்தான். சீந்திற்கொடி கொண்டுவந்து பன்றியின் கால்களைக் கட்டி வேலைத் தன் தோளின்மேலிட்டுப் பன்றியை அதில் தொங்கவிட்டு, அடிமேலடிவைத்து நடந்து, அண்ணன்மாரிருக்குமிடத்தையடைந்து பன்றியை இறக்கி வைத்தான்.

வீரமலைக் காட்டில் அண்ணன்மார் பன்றியைக் குத்திக் கொன்றதையும் பன்றி வீறிட்டிறந்ததையும் காவலாளர்களும் வீரதங்காளும் முறையிடக் கேட்டுக் காளிமன்னன் கோபமூண்டு, எங்ஙனமாயினும் பன்றியைத் திருப்புதல் வேண்டுமென்றஉறுதியுடன் ஆண்பிள்ளையென்றுபிறந்து அரைஞாண்கட்டியவொவ்வொரு வேடுவனும் போர்க்குப் புறப்படுதல் வேண்டும் என்று கட்டளையிட்டான். நாற்றிசையிலிருந்தும்வேடுவர் புற்றீசல் புறப்பட்டதுபோல் வல்லயம் வாள்வேல் அம்பு முதலிய ஆயுதங்களைத் தாங்கிவந்து வீரமலையை நோக்கிப்புறப்பட்டனர். அச்சமயம் ஒரு பாறையின்மீது அண்ணன்மார் ஏவ, சிற்றாலைப்பட்டணத்தார் பன்றியைக்கருக்கி அரிந்து, வீடெண்ணிக் கூறுபோட்டனர். தங்காளுக்குப் பட்டத்துப் பங்கு ஒதுக்கிவைத்தனர்.

காளிமன்னன் ஒரு கிழ வேடுவனைத் தன் பக்கலுக்கு அழைத்து "பாட்டா, வேளாண்பயல்கள் இப்பொழுது நம் பன்றியைக் கூறுபோட்டுக்கொண்டிருக்கின்றனராம். அப்பன்றியைத் திருப்பாவிடில் நாம் ஆண்பிள்ளைகளாவோமா? நீ சென்று அவர்களை ஏமாற்றி எப்படியாவது ஒரு கூறு கறி வாங்கிவா. உன்னைத் தொடர்ந்து படையோடு நானும் வருகிறேன். அந்தப் பயல்களை இம்முறை நசுக்கிவிடுகிறேன்; போ, பாட்டா," என்று சொல்லியனுப்பினான்.

சின்னண்ணன், பக்கலிலிருந்த குன்றேறி வேடுவர் வருகின்றாரோ என்று பார்த்துநின்றான்.

கிழவன் சின்னண்ணன் கண்ணிற்படாமல் குன்றின் மறைவில் தள்ளாடிக் கோலூன்றி நடந்து கூறுபோடுமிடத்தை யடைந்து பன்றிக்கறியின்மேல் நாட்டம் வைத்து வாயில் நீரூற நின்றான்.

பொன்னர் கிழவனைக்கண்டு பரிந்து, 'பாட்டா, என்ன பார்க்கிறாய்?' என்றார்.

கிழவன், 'சாமி, போன ஆறுமாசகாலமாய் மூன்றுமுறைக் காய்ச்சலால் படாதபாடு படுகிறேன். பன்றிக்கறி தின்றால் நோய் விலகிப்போகுமாம். ஒருகூறு கொடுத்தீர்களானால்உங்களுக்குப் பெரிய புண்ணியம்' என்றான்.

பொன்னர், 'ஆமாம், பாட்டா. வீடெண்ணிக் கூறு போட்டாயிற்றே. இனி என்ன செய்யலாகும்?' என்றார்.

கிழவன், 'சாமி, நான் கொடுத்துவைக்கவில்லை. அதென்னவோ அங்கே கரேலென்று கிடக்கிறதே, அது கொஞ்சம் கிடைத்தாலும் போதும், ஆண்டவனே' என்றான்.

பொன்னர், 'ஆம், பாட்டா, அது பன்றித்தலை, வேண்டுமானால், நீ அதை எடுத்துக்கொள்ளலாம்' என்றார்.

கிழவன் அதுகேட்டுக் கண்ணொளிர முகமலர்ந்து, வேட்டியை இழுத்துக்கட்டிக்கொண்டு பன்றித்தலை கிடந்த இடத்துக்குப்போய் அதை இரு கைகளாலும் தழுவி

m211,N28kN
N32.5.32
199144

யெடுத்தான். அது அசையவில்லை; புரட்டிப் பார்த்தான்; அது புரளவுமில்லை.

குன்றின்மேல் ஆள்பார்த்து நின்ற சின்னண்ணன் கிழவனைக் கண்டு, ஐயுற்று, குன்றினின்றும் இறங்கி ஓடிவந்து, அண்ணனை நோக்கி, 'அண்ணா, இவன் வேடுவன். இவனுக்குப் பன்றித்தலை கொடுத்தல் வெற்றிகொண்ட நமக்குத் தாழ்வு' என்று சொல்லிக் கிழவனை வாளால் எறிந்தான். வேடுவன் 'ஐயோ!' என்று கூவி வீழ்ந்தான்.

கிழவனது கூக்குரலைக் கேட்டு வேடுவர் குலவையிட்டு ஓடிவந்து அண்ணன்மாரைச் சூழ்ந்தனர்; போர் மூண்டது.

அண்ணன்மாரும் மைத்துனரும் சாம்பானும் வெள்ளாட்டுப் பட்டியிலே வேங்கைகள் நுழைந்ததுபோல் வேடுவர்படைக்குட் புகுந்தனர். அவர்களது நெடிய உருவங்களையும் தோள்வலியையும் கையிற்பற்றிய ஆயுதங்களையும் நேரிற்கண்டு வேடுவர் திகைத்தனர். வேடுவரை வெள்ளரிக்காய்போல வெட்டினர். தென்னங் குரும்பைப்போல் சிதைத்தனர். எதிர்த்துநின்ற வேடுவர் கையற்று வீழ்வாரும் காலற்று வீழ்வாரும் மார்பு பிளந்து வீழ்வாரும் மண்டையுடைந்து வீழ்வாரும் தடுமாறிப்படுவாரும் வேல்பட்டுருவி வீழ்ந்து கிடப்பாரும் கையெடுத்துக் கும்பிட்டுக் காலில் வீழ்வாருமாயினர். அவ்வமர்க்களம் முழுதும் எங்குப்பார்த்தாலும் பிணக்குவியிலும் ஆயுதக்குவியலும் இரத்த வெள்ளமும் நிறைந்தன. அங்குப் புரண்டோடும் இரத்த வெள்ளத்தில் பிணங்கள் உருளும், முண்டங்கள் கூத்தாடும். அம்புகளும் வில்களும் ஈட்டிகளும் வேல்களும் அங்கங்கே தொக்குநின்று அவ்வெள்ளத்துக்கிட்ட அணைபோல் கிடந்தன; பருந்தும் நரியும் விருந்துண்டன.

வேட்டுவப்படை நெடுநேரம் உறுதியோடு போர் புரிந்ததாயினும் இறுதியில் முரிந்து நாற்றிசையிலும் சிதைந்து ஓடத்தலைப்பட்டது. அண்ணன்மார் அப்படையை வீரப்பூர் வரையிலும் விடாதுதொடர்ந்து மற்றும் பலரைக்கொன்று திரும்பினர்.

அன்று நடந்தபோரில் இருதிறத்திலும் உயிர் துறந்தோர் ஆயிரவராவர்.

மாலைப்பொழுதாயிற்று. கதிரவன் தன் செவ்விய கிரணங்களைப் பரப்பிப் போர்க்களத்தை விளக்கமுறச் செய்து மறைந்தான். குள்ள நரிகள் ஊளையிட்டன. இருள் கவிந்தது. இளங்காற்று வீசிற்று. விண்மீன்கள் ஒளிர்ந்தன.

அன்றிரவு நெடுநேரமானபின் வெற்றிப்பறை முழங்க அண்ணன்மார் சிற்றூலைப்பட்டணத்தை யடைந்தனர்.

இங்ஙனம் சில நாட்கள் கழிந்தன.

கம்பராமாயணம்

ஆரணிய காண்டம்—6. கரன் வதைப் படலம்.

[576-வது பக்கத் தொடர்ச்சி]

வெகுளா மரபுடை யருண்மலி வீரன்.

வெருவரு வெந்திறல் திரிசிராவும் கரமொடு சிரங்களும் தரையுகுத் தொழிதலும், உள்ளத்தில் அச்சமும் முதுகின்மேல் தத்தம் உயிரையுஞ் சுமந்து, குருதிநீரிடை நிணம்வழுக்கக் குடர்தொடக்க ஓடிய நிருதரை விலக்கியவண்ணமாய்த் தூடணன் வந்து களத்துள் தோன்றினன். அச்சமென்பதொன்று உருக்கொண்டாலென விரைந்தோடும் அவ்வரக்கரோ தூடணன் விலக்கியும் நின்றிலர். நிணமும் பிணமும் வழிக்கியுருட்ட விரைந்துடைந்து இரியல்செல்கின்றார். மருண்ட இவர்கண்களுக்கு எங்கும் யாவும் தம்மைத் தொடர்கின்ற இராமபாணங்களாகவே தோன்றுகின்றன. ஆதலின்,

மண்டி யோடினர் சிலர்நெடுங் கடகரி வயிற்றிற்
புண்டி றந்தமா முழைபிடை வாளொடும் புகுவார்
தொண்டைநீங்கிய கவந்தத்தைத் துணைவநீ யெம்மைக்
கண்டி லேனெனப் புகலெனக் கைதலைக் கொள்வார்

[மண்டி ஓடிய சில அரக்கர், பெரிய மதயானைகளின் வயிற்றில் கிழிந்து திறந்த இரணங்களாகிய பெரிய குகைகளில், தம் கையில் ஏந்திய வாள்களுடன் நுழைந்து ஒளிந்துகொள்பவர்களாய், அருகில் தொண்டை அறுபட்டு நின்றிருந்த கவந்தத்தை நோக்கி, "நண்பனே, இராமபாணம் எங்களைத் தேடிக்கொண்டு இவ்வழி வந்து உன்னைக் கேட்குமானால், எங்களை நீ பார்த்ததேயில்லை என்று சொல்லிவிடு' என்று தம் கைகளைத் தலைமேற்கொண்டு அக்கவந்தத்தை வணங்குவார்கள்.]

விண்ணின்ற தேவர்கள் இதுகாணக் கைபுடைத்து நகுகின்றார். துனையும் வாம்பரித்தேருடன் தூடணன் அனையராகிய அவ்வரக்கரைத் தொடர்ந்து உறுதிகள் கூறிக் களத்தில்நிறுத்த முயல்வானுப் பற்பல எடுத்துப் பகர்கின்றான்:—

வச்சை யாமெனும் பயமனத் துண்டென வாழுங்
கொச்சை மாந்தரைக் கோல்வளை மகளிருங் கூசார்
நிச்ச யம்மெனுங் கவசந்தா னிலைநிற்ப தன்றி
அச்ச மென்னுமீ தாருயிர்க் கருந்துணை யாமோ

[பழிக்கப்படும் அச்சத்தை மனத்திற் கொண்டு வாழ்கின்ற இழிவுடைய மனிதர்களுக்கு, அழகிய வளையல்களை அணிந்த மாதர்களும் அஞ்சமாட்டார். அவ்வாறிருக்க, அரக்கர்களாகிய நீங்கள் இப்படி அஞ்சுவது தகுமோ! அன்றியும், மனஉறுதியாகிய கவசமே போரில் உடையாமல் நிலைநிற்கக் கூடியதேயொழிய, பயந்து ஓடித் தப்பிவிடுகின்றதென்னும் இது உங்கள் அருமையான உயிர்களுக்குத் தகுந்த காவல் ஆகுமோ!]

பூவ ராவுவேற் புரந்தர னோடுதான் பொன்று
மூவ ரோடுதான் முன்னின்று முட்டிய முனையி
லேவ ரோடின ரிராக்கதர் நுமக்கிடைந் தோடுந்
தேவ ரோடுகற் றறிந்துளி ராமெனத் திகைத்தீர்

[பூவேலை செய்யப்பட்ட வேலாயுதத்தை யுடையதேவேந்திரனுடனும், அழிவில்லாத மும்மூர்த்திகளுடனும் எதிர்த்துநின்று மோதியபோரில் எந்த இராக்கதர் அஞ்சி ஓடினர்? உங்களுக்கு அஞ்சியோடும் அத் தேவர்களிடத்திலேயே நீங்களும் பயந்துஓடப் பழகி யறிந்தீரோ என்னும்படி மதிமயங்கினீர்]

இங்கொர் மானிடற் கித்தனை வீரர்க ளிடைந்தீர்
உங்கை வாளொடு போய்விழுந் தூர்புகலுற்றீர்

கொங்கை மார்பிடைக் குளிப்புறக் களிப்புற்றுங்
[கொழுங்க
ணங்கை மார்களைப் புல்லுதி ரோகல நுகர்வீர்

[இத்தனை வீரர் நீங்கள் மனிதன் ஒருவனுக்குப் பின்னிட்டு ஓடி உங்கள் கைகளில் வாள்களுடன் போய் விழுந்து ஊர்ந்து ஒளிந்துகொள்ளத் தலைப்பட்டீர். முலைகள் மார்பிலே அழுந்தும்படி களிப்புற்று மதர்த்த கண்களையுடைய உங்கள் மனைவியர்களைத்தழுவி இன்பங்கள் நுகர்வதற்கே நீங்கள் தகுந்தவர் போலும்]

செம்பு காட்டிய கண்ணிணை பாலெனத் தெளிந்தீர்
வெம்புகாட்டிடை நுழைதொறும்வெரி நுறப்பாய்ந்த
கொம்பு காட்டுதி ரோதட மார்பிடைக் குளித்த
அம்பு காட்டுதி ரோகுல மங்கையர்க் கம்மா

[செம்பின்நிறமுடையகண்களிரண்டும்பயத்தினால் பால்போல வெளுத்துத் தெளிந்திருக்கின்றவர்களே, உங்கள் அரக்கர்குல மங்கைமார்க்கு, கொடிய காட்டினிடையே ஓடி ஒளிந்துகொள்ள நுழையும்பொழுது உங்கள் முதுகுகளிலே மரக்கொம்புகளால் பட்ட புண்களைக் காட்டுவீர்களோ! அல்லது உங்கள் பெரிய மார்பிலே தைத்த அம்புகளைக் காட்டுவீர்களோ; இதனை இப்பொழுதே சிந்தித்துப்பார்த்துச் சொல்லுங்கள்]

ஏக்க மிங்கிதன் மேலுமுண் டேயிகன் மனித
னுக்கும் வெஞ்சமத் தாண்மையவ் வமரர்க்கு மரிதாத்
தாக்க ரும்புயத் துங்குலத் தலைமகன் றங்கை
மூக்கொ டன்றியு முதுகொடும் போம்பழி முயன்றீர்

[பகையுடைய இந்த மனிதனொருவன் செய்கின்ற கொடிய போர்த்திறமை தேவர்களுக்கும் இல்லை என்னும்படி, எதிர்ப்பதற்கரிய தோள்களையுடைய உங்கள் குலத்தலைவன் இராவணனது தங்கை சூர்ப்பணகையின் மூக்கு அறுபட்டதால் வந்த பழியுடன்மாத்திரம் நில்லாமல், உங்கள் முதுகிலும் பழியைச் சுமந்துகொண்டுபோகத் தொடங்கிவிட்டீர். இதனைவிட இரங்கத்தக்கது வேறு உண்டோ]

ஆர வாழ்க்கையின் வணிகரா யமைதிரோ வயில்வேல்
வீர வாட்கொடு வேன்மடுத் துழுதிரோ வெறிபோர்த்
தீர வாழ்க்கையிற் றெவ்வரைச் செருவிடைப் பறித்த
வீர வாட்கையி ரெங்ஙனம் வாழ்திரோ விளம்பீர்

[வெறித்துப் போர்செய்கின்ற உங்கள் க்ஷத்திரிய தருமப்படி பகைவரை யுத்தத்தில் உயிர்கவர்ந்த இரத்தம் நனைந்த வாள்களை ஏந்திய கைகளையுடையவர்களே, இனி முத்து சந்தனம் முதலியவைகளை விற்றுப் பிழைக்கும் வைசியர்களாய் அமைவீரோ, அல்லது, கூர்மை பொருந்திய வேலாயுதத்தையும் வீரம்பொருந்திய வாளாயுதத்தையும் கொண்டு நிலத்தை விளைத்து உழுது பிழைக்கின்ற வேளாளர்களா யமைவீரோ, எவ்வாறு வாழ்வீர்களோ சொல்லுங்கள்]

என்று வீரமூட்டப் பலபடிமுயன்ற தூடணன்மொழிகளைக் கேட்டும் திரிசிராவின் படைஞர் பயம் நீங்கினரலர். சூர்ப்பணகை தன் மூக்கினைவிற்று வாங்கித்தந்த பழியைத் தம் முதுகிலே சுமந்து செல்வதற்கே இசைந்திருந்த இவ் வரக்கரை நோக்கிய தூடணன், "நீங்கள்பொருதற்கு வெருவுகின்றீர்களாயினும் ஓடாமலேனும் சிறிது நின்று என் நெடுஞ்சிலை வலிமையாயினும் காண்பீர்" என்றியம்பித் தானும் தன் எறிகடற் சேனையுஞ் சென்றுதாக்க இராமனும் நன்றென எதிர்செல நடவாமுன்னம்,

தோன்று மால்வரைத் தொகையெனத்
துவன்றிய நிணச்சே
றூன்ற பாழ்வயிற் றலகையைப்
புகல்வதெ னமர்வேட்
டேன்றி னோரெலா முலைந்தன
ரொல்லையி லொழிந்தார்
கான்ற வின்னுயிர் காலனுங்
கவர்ந்துமெய்ம் மறந்தான்

[போரை விரும்பி எதிர்நின்ற அமரர்களெல்லாரும், விரைவில் அழிந்தொழிந்தனர். அவர் உடல்களினின்று பெயர்ந்தஉயிரைஎடுத்துச்சென்றுசென்று களைப்படைந்து எமனும் மெய்மறந்துவிட்டான். எனின், அவ்வரக்கர்களுடைய கொழுப்புக் குழம்பு நிறைந்த பாழ்வயிறுடையவைகளாய் உயர்ந்து தோன்றும் பெரிய மலைகளின் கூட்டம்போல நெருங்கிய பேய்களைப்பற்றிச் சொல்லவும்வேண்டுமோ]

"ஒருவனுப் ஒருதிறத்து நின்று செய்யும் இப்போரில் தனக்கு வேலை அதிகம் இராதென மதித்த காலன் தன் தூதுவரை அனுப்பியிருந்தனன். அவர்களோ கடிதுயிர் கவர்ந்த நோவினால் தம் தலைவன்முன் காலைப் பிடித்துக்கொண்டு உட்கார்ந்துவிட்டனர். ஆதலின் முதல்வனே இப்பொழுது முனையவேண்டி வந்தது. அவனும் மெய்ம்மறந்து போயினான்; நிணச்சேறு தின்றுதின்று அலகைகளும் அன்னவேயாயின; எமனும் பேயும் மெய்ம்மறக்கவோ இராமன் இது செய்கின்றான்" என்றிவ்வண்ணங் கம்பர் இக்களத்தினை யோர் செருவிளையாட்டாகச் செய்தமைக்கின்றார். வீர இராமனுக்கிது விளையாட்டாயினும் வெகுண்ட அரக்கர்க்கிதனினும் வினை வேறியாதுளது. ஆதலின்,

களிறு தேர்பரி கடுத்தவர் முடித்தலை கவந்த
மொளிறு பல்படைத் தங்குலத் தாக்கர்த முடலம்
வெளிறு சேர்நிணம் பிறங்கிய வடுக்கலின் மீதாக்
குளிறுதேர்கடிதோட்டினன் றூடணன்கொதித்தான்.

[தூடணன் கோபங்கொண்டவனாய், யானைகளும் தேர்களும் குதிரைகளும் கோபித்த அரக்கர்களுடைய கிரீடமணிந்த தலைகளும் அவர் கவந்தங்களும், பிரகாசிக்கின்ற பல ஆயுதங்களையுடைய தம் குலத்து அரக்கர்களுடைய உடம்புகளும், வெண்ணிறமுடைய கொழுப்பும் என்னுமிவை குவிந்துயர்ந்த மலைகளின்மீது, ஒலிக்கின்ற தனது தேரைக் கடாவினான்]

பிணத்தின் மலைகளில் ஏறியும் இறங்கியும் இருபத்தைந்து குதிரைகள் பூட்டியதாய், கூற்றுவன்முன் உயிர் செல்வதென்ன இராமசந்திரன்தன் கணைகளுக்கெதிர்

சென்ற தேரையுஞ் சிலையுடை மலையெனத் தேர்மே
னின்ற தூடணன் றன்னையு நோக்கிய நிமல
னன்று நன்றுநின் னிலையென வருளிறை நயந்தா
னென்ற காலத்தவ் வெய்யவன் பகழிமூன் றெய்தான்

[வந்த தேரையும், வில்லையேந்தியவோர் மலைபோல் அத்தேரின்மீது நின்ற தூடணனையும் பார்த்த இராமன், "உன் நிலை மிக நன்றாயிருக்கின்றது" என்று அருளினோடும் சிறிது வியந்தான். அவ்வளவில் அக் கொடிய தூடணன் மூன்று பாணங்களை எய்தான்]

இப் பாணங்கள் பாய்ந்து இராமன் அணிந்திருந்த வீரபட்டிகையில் படுதலும்,

எய்த காலமும் வலியும்நல் லெனநினைந் திராமன்
செய்த சேயொளி முறுவலன் கடுங்கணை தெரிந்தா
னெய்தி னங்கவ னெறிற்பரித் தேர்பட நூறிக்
கையின் வெஞ்சிலை யறுத்தொளிர் கவசமுங் கடிந்
[தான்

[அவ்வரக்கன் சமயம்பார்த்து அம்பு எய்த திறமையும் அதனை எய்தவலியும் நல்லன என்று எண்ணி இராமன் அழகிய ஒளியுடைய புன்சிரிப்புச் செய்தவனாய்க் கொடிய பாணங்களை ஆராய்ந்து தொடுத்து விரைவில் அந்தத் தூடணனது வேகமுடைய குதிரைகள் பூட்டிய தேரை அழியும்படி சிதைத்து அவன் கையிலிருந்த கொடியவில்லையுந் துணித்து, விளங்குகின்ற கவசத்தையும் உடைத்தான்]

தேவ ரார்த்தெழ முனிவர்க டிசைதொறுஞ் சிலம்பு
மோவில் வாழ்த்தொலி நாற்கடன் முழக்கென வோங்
காவ டாவிது வல்லையே லீயெனக் கணையொன் [கக்
றேவி னானவ னெயிறுடை நெடுந்தலை யிழந்தான்

[தேவர்கள் ஆரவாரித்து மகிழவும் முனிவர் எல்லாத் திக்கிலும் நின்று உரைக்கின்ற வாழ்த்துக்களின் குறையாத ஒலி நான்கு கடல்களைப்போல் முழங்கவும், "உன்னாற் கூடுமானால் இதனைக் காத்துக்கொள்ளடா, பார்ப்போம்" என இராமன் ஓர் அம்பினை எவினான். உடனே அத்தூடணன் பற்களையுடைய தன் பெரிய தலையை இழந்தான்]

சேயொளி முறுவலோடு இராகவன் செய்த போர் தூடணன் தலையொடு முறிந்ததென் வியப்போ! பிற்றை நாள் இலங்கைக்களம் புகுந்த இராவணனும் இராமன்றன் சினஉண்மை தெரிந்ததில்லை. அதற்கிணங்கக் கம்பர் இவ்விடத்தும் இராமன் முகத்தில் முறுவலே பூக்கக்கண்டார். வான்மீகிமுனிவரோ வெகுளியோடன்றி இராமனை எங்கும் பொரவிடார். "கோபத்துடன் நின்ற இராமருடைய தோற்றம் தக்ஷனுடைய யாகத்தைச் சிதைத்திடவந்த பிநாகபாணியினுடைய தோற்றம்போலக் காணப்பட்டது" என்று போர்துவக்கா முன்னரே இராமன் நின்றநிலையை அம்முனிவர் வருணிப்பாரென்றால், "அரக்கர் எல்லாரையும் வதைசெய்யவேண்டுமென்று கண்களை விழித்துப் பார்த்துப் பெருங் கோபங் கொண்டது" மிகவும் தக்கதே. இப்படியே எவ்விடத்தும் இராமன் வெகுளியின் மிகுதியால் போர்விளைத்த தன்மையை வடநூலிற் பலபடி காணலாம்.

மனவுறுதி பொறிநுண்மை மெய்யாற்றல் அனையவைகளை விலையாகக்கொடுத்தன்றி வெகுளியை வாங்கலரிது. ஆதலின் மூண்ட பெருவெஞ்சினத்தோடு முனைந்துநின்ற அவ்விராமன் அரக்கர்தம்பாணங்களால் பட்ட அடி கொஞ்சமன்று. "மெய்ம்முழுதும் ஆயுதங்கள் பாய்ந்து இரத்தம் ஒடிக்கொண்டிருந்த இராமர், சாயங்காலத்தில் சிவந்த மேகங்களால் மூடப்பட்ட சூரியன்போல விளங்கினார்" என்று வான்மீகி முனிவர் பெருமையுடன் பேசுகின்றார். தன் முதனூலை முற்றிலும் மறக்கலாற்றாக் கம்பரும் இராமன் மீது அரக்கரது அம்பு பட்டதென்றொருவாறு ஒப்புக்கொள வேண்டியிருக்கின்றது. எனினும், வெகுளியின் விளைந்த அயர்வுபற்றி அச்சோர்வு நேர்ந்ததென்றேனும், அவ்வம்புகளை விலக்குதற்குரிய ஆற்றலின் குறைவினால் இராமன் இலக்காயினானென்றேனும் நினையாவண்ணம், தூடணன் வந்ததோர் பெற்றியைக் கண்டு அருளொடுவியந்து நின்றவோர் அற்றத்தகவயின் இதுநேர்ந்ததென்று கம்பர், இராமனது பெருமை இழுக்குறாவண்ணங் காக்கின்றனர். அருளாளனாகிய இராமன் தன் அருளுக்கே ஆளாகிச் சிறிது எற்றுண்டானென ஒருவண்ணம் மாற்றினர். வான்மீகத்தின்படி இராமனது நெற்றியில் அம்பெய்தவன் திரிசிரனைக் கம்பர் தூடணனுக்கு இச்செய்கையைச் சேர்த்த மாற்றம் பொருள்பெரி தொன்றுமுடையதில்லை. ஆயினும் அதனை,

"அவ்விருவர்களுடைய யுத்தம் வெகு பலம்பொருந்திய யானையும் சிங்கமும்போர் புரிந்ததுபோலத் தோன்றிற்று. பின்பு திரிசிரன் இராமன் நெற்றியில் மூன்று கூர்மையான அம்புகளை யெய்தான். அதைக் கண்டு இராமர் வெகு கோபம் அடைந்த போதிலும் அதை வெளியில் காட்டிக்கொள்ளாமல் அவனைப் பார்த்து, "ஆச்சரியம்! ஆச்சரியம்! வெகு பராக்கிரம்சாலியாகவும் சூரனாகவும் இருக்கும் இராக்ஷஸனுடைய பலம் எவ்வளவு அதிகம்! உன்னுடைய பாணங்கள் என் நெற்றியில் புஷ்பங்கள் பண்ணுங் காயத்தைப் பண்ணிவிட்டன! நானிப்பொழுது என் வில்லிலிருந்து விடுக்கும் பாணங்களை நீ ஏற்றுக்கொள்" என்று சொல்லிச் சர்ப்பங்களுக்கொப்பான பதினான்கு பாணங்களை வெகு கோபத்துடன் திரிசிரன் மார்பில் எய்தார்"

என்று வான்மீகிமுனிவர் கூறியிருப்பதைக் கம்பர், வியந்து செய்த சேயொளி முறுவலோடு இராமன், "காவடா இது வல்லையேல்" என்று எய்யும்படி மாற்றிக்கொண்ட நயம் மதித்தற்குரியதே.

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட் அவர்களின்



டானிக்குகள் :	தைலங்கள் :
ச்யாவனப்ராச	அமிர்தாமலக
ஜீவஸுதா	பிருங்காமலக
பாதாமி லேகியம்	ஸுகுமார
தந்வந்தரி லேகியம்	ஹிமஸாகர

"பாலஸுதா" குழந்தைகளுக்குச் சிறந்த டானிக் (ரூபா 1-0-0)
காஸ்ட்ராலக்ஸ்: சுத்தம் செய்து மூலிகை சேர்ந்த ஆமணக்கெண்ணெய் (6 அவுன்ஸ் 8 அணா)
ஸ்ப்ளிவரால்: குழந்தை கட்டிக்கும், ஜ்வரக் கட்டிக்கும் (ரூபா 2-0-0)
ஸ்ரீகர கஸ்தூரி மாத்திரை, (அணா 4) கோரோஜனை மாத்திரை, (அணா 6) பால சஞ்சீவினி (அணா 4)

ம.ட.ச்யாவனப்ராசா ம.ட.பிருங்காமலக தைலம் கோரோஜனை மாத்திரை
"நஞ்சன்கூடு பல்பொடி"
சாதாரணம்-பாக்கெட் (ரிஜிஸ்தர் செய்துள்ளது) ம.ட.டீ.மெடிகேடட்-டப்பி
(தபால் பில்லையுடன் லிஸ்டுக்கு எழுதவும். அட்வான்ஸுடன் ஆர்டர் செய்யவும்.)

பொதிகை நிகண்டு

[574-வது பக்கத் தொடர்ச்சி]

தானைவா கினிகவனம் பரிகர நிதானஞ்
சனம்பாடி படாதிகந் தந்திரம் பதாதி
சேனைபலங் காந்தாரந் தளம்பகுதி கூடி
திரள்பதா கினிகடகஞ் சோனைதண்டம் யூபம்
வானியம டகமனிகம் வரூதினி மூவொன்பான்
வாய்த்தபடைப் பொதுப்பேரொட் டுண்டை*தொந்தே
கானணிசூழ் படைவகுப்பாமணிகை நெற்றி தூசி [யூபங்
கடைக்குழைகூழையதாந்தார் கொடிப்படையாகுமதே.

ஆகமுடம் புருவமுடல் புணர்ப்புறப்புக் குரம்பை
யங்கமுயிர் நிலையூரகம் விக்கிரக மூர்த்தந்
தேகமவை யவங்காய மாதாரஞ் சட்டை
திருமேனி தாபரமெய் புட்கலஞ் சரீரம்
மாகனங் களேபரம்பூ தியம்பிண்டஞ் சடலம்
வடிவாங்காத் திரம்பூட்சி கடம்புதை சட்டகமே
சாய்கைதனு வாக்கைபுரம் படிவமுப்பா னெட்டாஞ்
சவம்பிணங் களேபரம் பிரேதமழன் கழிவே. (99)

கழல்சரணம் பதம்பாத மங்கிரிதாள் சலனங்
காலடியொன் பான்கரண்டை கரடுபர டாகும்
முழுகுகணைங் கால்சங்கங் கணைக்காலாஞ் சானு
முழந்துமுழங் கான்முட்டாங் குறங் கூருவாம்
மெழுதுகவான சோகமைந் துந்தொடையாகுந் துடைவே
ரிசைவுகந்து கொழுத்துமுட்டுக்கிரந்திசந்து பொருத்
தழுவியதோர் கழுத்துமாங் கடிதடமே நிதம்பஞ் [தாங்
சகனமல்கு லாம்பக்க மொக்கரை யொக்கலையே. (100)

கலத்தபகம் யோனிகுய்யம் பெண்குறியாம் பூவுங்
கற்பபுரந் தானுமாங் காமிலிங்கங் கோசம்
புலத்தவாண் குறியாகுங் குறிகாணுத் தலமே
பொதுவாகு மிடையுக்க மருங்குநடு நுசுப்பு
நலத்துறுமத் திமமரையா மிதலைசுழி போகில்
நாபியுந்தி யிலஞ்சிகொப்பூழ் நாமமா முதரந்
துலக்குமடி வயினகடு மோடுகுக்கி சடரந்
துத்தவமுஞ் சுத்தும்வயி றாகும்பூண் முலையே. (101)

முலைசுவற்கங் கொம்மைநகில் கொங்கைதனஞ் சேக்கை
முகிழ்பயோ தரங்குயங் குசுஉக்கணம்மம் பறம்பாம்
மலைமுலைக்கண் சுதலைசிலீ முகம்பாற்கண் சூசா
மருமமுர மார்பகல மாகநெஞ்சே யைந்தாஞ்
சொலுநெரிசல் பொறிதேமா பீர்துத்தி யுத்தி
சுணங்குவரி திதனிவசந் திகையினந்தி தித்தி
பொலிதிதலை நுணங்கீரேழ் தேமலாம் வாகு
புயமொய்ம்பு தோளினியற்பேர்பசுந்தோ ளணங்கே. ()

தோள்கரமே புயம்பாணி யத்தமுங்கைத் தலப்பேர்
தோய்முழங்கை கூர்ப்பரமாங் கிலுத்த மணிக்கட்டா
மாள்குடங்கை யகங்கையங்கை யுள்ளங்கைப் பேராம்
அங்குலியே விரலாகு நகத்தின்பே ருகிரா
மூள்கையொன்ற ராணமதாம் வென்னபரம் பிறகு
முதுகுபுறங் கோரைவெரின் பிறக்குமாந் தோண்மே
னீள்கயிலோ டெருத்தநிவம் பிடரிபரஞ் செகில
நிதலமிமில் சிறுபுறமும் பிடரியா மிங்கே. (108)

இங்கிதங்கந் தரங்கண்டங் களமிடறு கழுத்தா
றிதைக்கிரீ பமுமென்பார் முகம்வதனந் துண்டம்
பங்கயம்வத் திரமைந்து மானனமாந் தட்டம்
பாலிகையே யிதழோட்ட மதரமுத்த முதடாந்
தங்கியமோ வாய்தட்டந் தாடியாஞ் சதனந்
தந்தம்பல் லெயிறுகு நகைமுறுவல் மூரல்
பொங்கிழியார்ப் பசியாசம் விடம்பனமுஞ் சிரிப்பாம்
புகல்சிகுவை நாத்தாலந் தாரமிவை நாக்கே. (104)

நாக்கின்மே லண்ணமண்ணுக் குண்ணுக்கென் றுகு
நவிலுமண்ண மிடறுகுஞ் சிபுகமண்ண மணரி
யாக்கணலுங் கீழ்வாயின் † புறமாங் கபோல
மனுக்கதுப்புக் கொடிறுகவுள்கன்னங் கேசமுமாம்
பார்க்கும்விழி நயனநேத் ‡திரமக்கஞ் சக்குப்
பார்வைதிட்டி திருட்டிலோ சனந்தார நாட்ட
நோக்கம்விலோ சனந் திருக்குத் தெரிசனமம் பகங்கோ
றுவலாலோ கனந்தாரை யக்கிகண்பத் திரட்டே. (105)

இரு விழியின் விளிம்பிமையா மணிதாரை யாகு
மிணைநாசி கோணைகிரா ணந்துண்ட மூக்காம்
பிருநுதல் புரூரம்பீர் புதல்புதடி பூருப்
பீருகுடி புருவமதாங் கேள்விவள்ளுக் காது
சொருகு *சோத் திரங்கன்ன மைந்துபேர் செவிக்காஞ்
சூழைகுள மளிகம்விலா டம்பனிச்சை பாலம்
பெருகுபண்ட மத்தகமுண் டகநுதலாம் பத்துப்
பேருநெற்றி யாகுமென்பர் பேரறிஞ ருவந்தே. (106)

உவவிமுண்டஞ் சிரஞ்சென்னி முடிமூர்த்தஞ் சிகரம்
உத்தமாங் கந்தலை சேகரமுச்சி கம்மே
நவிரொடுமத் தகம்பதிறு லுஞ்சிரசின் பேரா
நவிர்பங்கி யளகதுப்புச் சிகைகுஞ்சி குடிலை
தவிர்சுரியல் குழல்கேச மோரிதொங்கல் பித்தை
தளைபிச்சந் தார்சிரோ ருகமுமாண் மயிர்ப்பேர்
கவிசுடிகை சூழிநவி ரஞ்சூட்டி யுச்சி
காண்சிமிலி சிகைசிக்கஞ் சிமைகுமிமுடியே. (107)

முடிமவுலி குழல்பந்தி சிகழிகை பின்னகமே
முச்சிதம் மிலங்கொப்புச் சுடிகைதொங்கல் கொண்
குடையபெயர் சுரியல்குழல் குரலளகங் கேசம் [டைக்
உளைகதுப்புப் பரிசாரங் கூழைகுரு ளோதி
நெடிமைசுருள் பங்கிசிரோ தங்கோதை யைம்பா
னோர்விலோ தங்கூந்தல் கொந்தளமா ராட்டம்
அடுரோமம் பெண்மயிர்ப்பேர் கொந்தளம் விரோத
மளகமயிர்க் குழற்சியெனத் தெளிகுவை நீ மயிலே.

மயிர்ச்செறிவு ரோமமுஞ் சிரோதமுமாம் வேணி
† மயிர்த்திரள்கோ டீரம்பின் னலுங்கபத்தங் குடில
‡ மியற்சடில முஞ்சடைப்பேர் வாரிவரை பிறங்கோ
டிறைவரியும் பொறியாகுஞ் சரைதிரையாம் பலிதஞ்
செயத்தநரைப் பேர்நாடி சங்கனன நரம்பு
சிரையாகுங் கழலையின்பே ரலையதாங் காச
மயிர்த்தகயங் கோழையையாங் கச்சைவடுச் சேக்கை
யங்கிதமே வசியுடலிற் றழும்பாயத் திடுமே. (109)

அத்திகளே பரமங்க மெலும்பாங் கங்காள
மாவதே முழுவெலும்பாம் வெண்டலை கபாலம்
மெய்த்தலையி னோடுமண்டை யாங்கவந்தம் யூப [யல்
மெய்க்குறைமட் டையுமதுவாங் கிருத்திமந்தொக் குரி

* கொந்தே (பி-ம்)

† புறமாகுங் கதுப்போ (பி-ம்)
‡ டனுக்கொடிறு கவிழ்கபோலங் கன்னமாகும் (பி-ம்)
* தோத்திரம் (பி-ம்)
† மயிர்த்திரளே பின்னல்சடிலங்குடிலஞ் சடைப்பேர்(பிம்)
‡ இயற்றுகோடீரமுமாம் (பி-ம்)

சொத்துரிவை யுரியொலிய லதள்பொச்சை சருமங்
குளிர்துவக்குப் புனிறுவடை கம்புறணி போர்வை
வைத்தபச்சை தோற்பெயர்சூல் சினைகருப்பம் விந்து
வாலேவயா வயிற்பொறைபீள்*வயல் கருப்பேர் தருமே.

எருவைசெந்நீர் கறை சுடுவல்சோரி நெய்த்தோர் சோரை
யிரத்தப்பே ரீருளென்ப நீரலாஞ் சோரி
வெருவு துப்பு விழுக்கிழுது நெய்நிணம் வெளுப்பு
விளர்விளிறு கொழுப்பாகு வழும்பின்பேர் வழுக்கே.

த்ருதசையூன் விடக்குமுடை வள்ளூரம்புண் புனிதங்
தடிபிசிதம் புலவுபுலா லிறைச்சி‡யிற்றி யூத்தை
புரணிபூ திய மூழ்த்தல் யாங்கிஷப்பேர் குருதி
புண்ணீர்சோ ணிதமுதிரஞ் செம்பால் புலாணீர்

வழுத்தருமா சழுக்கூத்தை விட்டைகட்ட மிலத்தி
மலமாகும் பொறிவாயில் குறிகந்தங் கரணஞ்
செழித்திடுமிந் திரியப்பேர் மெய்வாய்கண் மூக்குச்
செவியைந்தும் பொறியாகுஞ் சுவையொளியூ றோசை
யழுத்தியதோர் நாற்றமைந்தும் புலனுகுஞ் சீவ
னுதனிய மானனுப் புற்கலன் சேதனனே
யொழித்தபசுப் பிரசகிருதி சதசத்துச் சகல
னுயிர்பூமா னவ்வியத்த னுள்ளமான் மாவே. (112)

* வயில் (பி-ம்)

‡ யித்தி யூற்றை (பி-ம்)

இரண்டாவது மக்கட்பெயர்த் தோகுதி முற்றும்.

மலர்வனம்

காணுய் தோழி கல்லழுந் தோற்றம்.

ஒத்துணர் நலத்த துலகத் தியற்கை. இவ்வுண்மையைக் காணவல்ல கூர்மைவாய்ந்தன காதல் மீதூர நின்ருர் கண்களே. அன்பினு லீர்க்கப்பட்ட இருவர் தம் உள்ளம் நெருங்க நெருங்க இயற்கையின் உருவமும் பரிவும் திரண்டு வருவதோர் காட்சி தெரிதரலாகின்றது. மக்கள்தம் மனமொடு ஒத்துறழ் இயற்கையைத் தற்குறிப்பேற்ற மென்பர் தண்டமிழ்ப் புலவர். ஆங்கிலம் வல்லுநர் அதனை pathetic fallacy என்றியம்புவார். கலைமலி புலவர்வாய் இந்நலமுடைச் செய்தியைக் கேட்குந்தோறும் இரும்பென நின்ற இதயமும் உருகிக் கரும்பினும் இனியதாய்ச் சுவைக்குங் கண்டீர். அன்னதோர் பாடல் நம்மரும் புலவர் நல்லந்துவனுர் நவில்தற் கிசைந்தார். எம்மோ டதனை இன்புறக்கேட்க நண்பர்காள் சற்றே வம்மின்:—

அலர் பலர் தூற்றுவர் பகல்நீ வாரல், என வரவு விலக்கிவரைவுசுடாவிய தோழிக்கு,மற்று வருவல் யான் இரவெனப் பகர்வான் தலைமகன். அருநெறிவதம்பெரிதுளதாதலின் இரவின் வருகை இனி யொழி என்னின், பகலே வருவல் பைந்தொடிமாட்டென மாறிச் சொல்வான். வரைவிடை வைத்துப் பிரிதற் காற்ருப் பெருமகன் மற்றென் செய்வான். என்னினிப் புரிவல் என ஏங்குவள் தோழி. தலைவியே சென்று தன்னை வரைந்துகொள வேண்டல் தகவுடைத்தன்று. தம்மொரு நிலையின் தாங்கருந்துயரை அறிவானுயின் இரங்குவன் தலைமகன்,வரையவும் வரைவான் என்றுணர் திறத்துப் பேதைமடவார், வந்துளன் சிறைப்புறந் தலைமகன் என்னுத் தெரிந்தும், தெரியார் போலத் தம்முள் உரைசிலசெய்து அவனை வரைவின்பால் ஊக்கும் பரிசு இதுவென ஓர்க. தலைமகட் கிவையிவை சொல்வாள் தோழி—

யாஞ்செய் தொல்வினைக் கெவன்பே துற்றனை
வருந்தல் வாழி தோழி யாஞ்சென்
றுரைத்தனம் வருக மெழுமதி புணர்திரைக்
கடல்விளை யமுதம் பெயற்கேற் ருஅங்
குருகி யுகுத லஞ்சுவ லுதுக்காண்
தம்மோன் கொடுமை தம்வயி னேற்றி
நயம்பெரி துடைமையிற் ருங்கல் செல்லாது
கண்ணீ ரருவி யாக
அழுமே தோழியவர் பழமுதிர் குன்றே

[தோழீ,நாம் செய்த முன்வினை இவ்வாறு இருப்பதால் நீ யேன் வீணே கலங்குகின்றனை. வருந்தாதே. நீடு நீ வாழ்வாயாக. நம்முடைய துன்பத்தை நாமே சென்று கூறிவிட்டு வருவோம் வா. நெருங்கிய அலைகளையுடைய கடலில் விளைந்த உப்புக்குவியல் மழையில் அகப்பட்டுக் கரைந்து அழிவதுபோல நீ உள்ளம் உருகி அழிவதைக் காண நான் அஞ்சுகின்றேன். அவர் வாழும் அந்தப் பழமுதிர்கின்ற மலையானது, தன் தலைவன் நம்மிடத்துச் செய்கின்ற கொடுமையை நினைத்து நம்பால் பெரிதும் இரக்கம் உடைமையால் தன் துன்பத்தை அடக்கிக்கொள்ளமாட்டாமல் தன் கண்ணீர் அருவியாகப் பெருகும்படி அழுகின்றது. அதனை அதோ பார். அவர்மட்டும் இரங்குபவ ரல்லர்.

மலையே அழுதிரங்கக் கண்டபின்னும் தலைவனினிக் காலந் தாழ்த்துவானே. மலையின் அழுகை கண்டிவன் உருகானுயினும், நற்றங்கொற்றனுர் வாயின் கற்றறிந்த இம்மடவாள் மொழிக்கேனும் இளகானே ! சிறைப்புறம் மறைந்துளன் தலைவனெனவறிந்த தலைவி தோழிக்குரைக்கின்ருள்:—

திருந்துகோ லெல்வளை வேண்டியா னழவு
மரும்பிணி யுறுநர்க்கு வேட்டது கொடாது
மருந்தாய்ந்து கொடுத்த வறவோன் போல
வென்னை வாழிய பலவே பன்னிய
மலைகெழு நாடனெடு நம்மிடைச் சிறிய
தலைப்பிரி வுண்மை யறிவான் போல
நீப்பநீங் காது வரின்வரை யமைந்து
தோட்பழி மறைக்கு முதவிப்
போக்கில் பொலந்தொடி செறீஇ யோனே

[திருந்திய அழகிய ஒளி பொருந்திய தோள்வளை வேண்டுமென்று நான் அழுதலும், எனது தந்தை, கொடிய நோய் உடையவருக்கு அவர் விரும்பியதைக் கொடுக்காமல், ஆராய்ந்து அந்நோய்க்குத் தக்க மருந்து கொடுத்த நல்ல தருமகுண முடையவன்போல, யாவராலும் புகழப்படுகின்ற மலைநாட்டையுடைய காதலனும் நானும் இடையிடைவிட்டுப் பிரிவதன் உண்மையைத் தானும் சிறிது அறிந்தவன் போல்,யான் கழற்றினுலும் கழலாமல், ஒருபொழுது கழன்ருலும் தன் எல்லை கடவாமல் தங்கி எனக்குண்டாகிய தோளின் பழியை மறைக்கின்ற உதவியைஉடைய கெடாத பொன்னுலாகிய தோள்வளை செய்து தந்து அணிந்துகொள்ள வைத்தனன். ஆதலின் அவன் நெடுங்காலம் வாழ்வானுக]

தந்தையும் வாழ்க. மகளும் வாழ்க, இவர்தமைக் கற்பித்திவ் வுலகிற் கருளிய நற்றங்கொற்றனுர் மரபும் நந்தாமல் வாழ்க.

சென்னைத் தமிழ் லெக்ஸிகன் பதிப்பாசிரியர் திருவாளர் S. வையாபுரிப் பிள்ளையவர்களால்

— பதிப்பிக்கப்பெற்ற நூல்கள் —

தமிழகராதி ஆதார நூற்ருெகுதி
நாம தீப நிகண்டு.

நிகண்டுகளின் வரலாறு, ஆசிரியரது காலம், நூலின் நயங்கள், முதலியன அடங்கிய சிறந்த முன்னுரை கொண்டது. பொருட் பெயர்களை விளங்கக் கூறும் செவ்விய உரைபாடமுள்ளது. நூலின்கண் வந்துள்ள பொருட்பெயர்களனைத்தையும் முற்ற வுணர்த்தும் அனுபந்தம் பெற்றது. சுமார் 12000 சொற்கள் கொண்ட சிற்றகராதியாக உதவுந் தகையது.

விலை ரூபா 2-0-0

அரும்பொருள் விளக்க நிகண்டு.

சிறந்த ஒரு சொற் பல்பொருள் நிகண்டு. நிகண்டுகளின் வரலாற்றினை விளக்கும் விரிந்த முன்னுரையுடன் கூடியது. சொல்லின் பொருள்களை யெளிதாகத் தெரிந்துகொள்ளுதற்குப் பலபொருளொருசொல் லகராதி சேர்க்கப்பட்டுள்ளது. விலை ரூபா 1-4-0

கம்பராமாயணம்—உயுத்தகாண்டம்.

முதல் மூன்று படலங்கள்: பல ஏட்டுப் பிரதிகளை ஒப்புநோக்கித் திருத்தியது; பாடபேதங்களனைத்துங் கொடுக்கப் பெற்றது. விலை ரூபா 0-6-0

திருக்குறள்

மூலமும் சொற்குறிப் பகராதியும் விஷய ஒப்புக்குறளும்
(வா. மார்க்க சகாயம் செட்டியார் பதிப்பு)

சிற்றடக்கமான இப்பதிப்பில் அட்டவணைக்கு மாத்திரம் 300 பக்கங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன. திருக் குறளைப் படித்து ஆராய விரும்புவார்க்கு இவ்வட்டவணை மிகவும் உபயோகமானதாகும். ஒப்புக்குறள்களைச் சேர்த்துப் பதிப்பாசிரியர் அளித்துளது மாணுக்கருக்குப் பெரிதும் பயன்தரும். இப்பதிப்பின் அருமை பயின்று பார்த்தாலன்றிச் சொல்லிக்காட்டுவது சுலபமன்று. விலை அணு 0-12-0

களவியற் காரிகை.

ஒரு சிறந்த அகப்பொரு ளிலக்கணநூல்; முதன்முறை இப்போதுதான் அச்சில் வெளிவந்தது. கிடைத்தற்கரிய பல அரிய நூல்களிலிருந்து எடுக்கப்பெற்ற மேற்கோள்களை யுடையது; பல அனுபந்தங்களையுடையது தமிழாராய்ச்சியாளர்க்குப் பெரிதும்பயன்படுவது. க்ரௌன் அளவில் 170 பக்கங் கொண்டது. சொற்பப் பிரதிகளே யுள்ளன. விலை ரூபா 3-0-0

நூற்பொருட் குறிப்பு.

1. இறையனுர் களவியலுரை; 2. குறுந்தொகை; 3. திருக்கோவையார்; 4. நற்றிணை; 5. களவழி நாற்பது; 6. தேவாரம்; 7. வீரசோழியம்; 8. நாலாயிர திவ்யப் பிரபந்தம் முதலிய எட்டு நூல்களின் பொருட்குறிப்பு அடங்கியது. தமிழ் லெக்ஸிகன் ஆபீஸ் தலைமைப் பண்டிதர் ஸ்ரீமான் மு. இராகவையங்காரவர்களால் தொகுக்கப்பட்டது. டெம்மியளவில் 175-பக்கங்கள் உடையது. இலக்கிய ஆராய்ச்சிக்கும் சரித்திர ஆராய்ச்சிக்கும் மிக இன்றியமையாதது. சொற்பப் பிரதிகளே யுள்ளன. விலை ரூபா 10-0-0

இராஜசுந்தரம்.

ஒரு நவீனகம். இனிய எளிய நடையில் எழுதப் பெற்றது. விலை ரூபா 0-8-0

தினகரமாலை யென்னும்-தினகர வெண்பா

திருக்குறளின் அதிகாரத்திற் கொரு வெண்பாவாக 133 வெண்பாக்களைக் கொண்டது. இது ஒரு பண்டை நூல். இதைப் பதிப்பித்தவர் ஸ்ரீமான் S. வையாபுரி பிள்ளை, B.A., B.L.,
விலை அணு 0-6-0

கலா நிலயம் ஆபீஸ், வேளாளர் தெரு, புரசை, சென்னை.

ANCIENT JAFFNA

MUDALIAR C. RASANAYAGAM C.C.S.

An authentic history of North Ceylon, Particularly of Jaffna based on archeological Epigraphic and linguistic researches is stated here in a connected manner from ancient times up to the occupation of the Island by the European Professor. S. Krishnasamy Iyengar has given an appreciatve forword.

PRICE Rs. 5-8-0.

KALANILAYAM

PURASAWALKAM :: VEPERY, MADRAS.

ஏமாங்கதத் திளவரசன்

ஸ்ரீமான் T. N. சேஷாசல ஐயர் B.A., B.L.,
எழுதியவோர்
செந்தமிழ்க்காதை.

கலா நிலயம், வேளாளர் வீதி, புரசைபாக்கம், சென்னை. விலை ரூ. 1—4—0

கலா நிலயம் 1930-வது வருடம் 3-வது வால்யூம்.

தலையங்கங்கள்:—அறியாமை வேண்டப்படும் 4. சுயநலச்சோதனை 8. விஷபத்திற்கேற்ற விளம்பரம். முயலுக்கு முயலவேண்டா. விளம்பினால் வெட்கக்கேடு. கல்லாதபேர்களே நல்லவர்கள் 3. நாணத்தால் நைவார்திறம். வாலின் நீளம். பெருமையின் பெருமை...முதலிய கட்டுரைகள் ஐம்பது, உலகியலோடு வாழ்க்கையின் தத்துவத்தை விளக்குவன

கம்பராமாயணம்:—(T. N. சேஷாசலம் ஐயர், B. A. B. L.) அயோத்தியா காண்டம் முதலிரண்டு படலங்களின் விளக்க ஆராய்ச்சி அரசியலுக்குரிய அறங்களில் திருவள்ளுவர் வேதவியாசர் முதலானோர்க்கும் கம்பருக்கும் உள்ள வேறுபாடு 25-கட்டுரைகளில் விளக்கப்பட்டுளது. ஸ்ரீமான் சோமசுந்தர பாரதியார் வரைந்துள, "தசரதன் குறையும் கைகேசி நிறையும்" என்னும் நூலிற்கூறிய பொருளும் முடிவும் கம்பருடைய கருத்திற் கொவ்வாதன வென்று 25-கட்டுரைகளில் வாதிக்கப்பட்டிருக்கின்றது.

குறுந்தொகை:—(K. இராமரத்நம் ஐயர், B. A.) புத்தகமாய் இப்பொழுது கிடைக்காத இச்சங்கநூற் செய்யுள் நானூறும் விளக்கமான உரையுடன் பதிப்பிக்கப் பெற்றிருக்கின்றது.

அப்பர்:—(E. N. தணிகாசல முதலியார், B. A. B. L.) அப்பர் அறுபத்துநான்கு கலைகளையறிந்து கையாண்ட பெருமை விளக்கப்பெற்றிருக்கின்றது.

இலஞ்சிப்பாவை:—(T. S. நடராஜபிள்ளை, B A. B. L.) Sir Walter Scott என்பவர் ஆங்கிலத்தில் பாடிய Lady of the Lake என்னும் காவியத்தைத் தழுவி எழுதிய கதை.

மானத சாத்திரம்:—(T. P. மீனாக்ஷிசுந்தரம் M. A., B. L.) ஆங்கிலமுறையைத் தழுவி, நடத்தை, உணவு நாட்டம், அழுகை, சிரிப்பு, தன்னெடுப்பு, தன்னொடுக்கம், புணர்ச்சி, இணைவிழைச்சி, விளையாட்டு முதலியவைகளின் தத்துவங்கள் விளக்கப்பட்டுள்ளன.

தமிழ்ப் பாடம்:—வில்லிபாரதம் கிருஷ்ணன் தூதுச் சருக்கமும், அஷ்டப்பிரபந்தமும் போதிப்பதுடன், புணரிலக்கணம் முழுவதும் தெற்றென விளக்கப்பெற்றிருக்கின்றது.

நம்மாழ்வார் வைபவம்:—(K. இராஜகோபாலா சாரியார், B. A. B. L.) விளக்கமான ஆராய்ச்சியுடன், 2-ம்பத்து 6-ம் தசகம் வரையிலும்.

இவைகளைத் தவிர, ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்த்த கட்டுரைகளும், ஆச்சரிய சூடாமணி என்னும் வடமொழி நாடக மொழிபெயர்ப்பும், சிலப்பதிகாரக் கானல்வரியை அழகுற விளக்கிய 'மாதவி மாதவம்' என்னும் கட்டுரைகளும், தனிப்பாடல்களும், அண்டபுராண ஹாஸ்யப் பாடல்களும், நாயன்மார் சரித்திர உண்மைபோன்றபல கட்டுரைகளும் நிறைந்துள.

1931-வது வருடம் 4-வது வால்யூம்.

தலையங்கம்:—அகமே புறம், வாழ்வாங்கு வாழ்பவர் 10. உண்மையில் உழல்வார் திறம் 5. மெய்ம்மையை அலமரச் செய்யலாமோ 4. அருமையினு மருமை 4 மறப்பது முறுதியாமே. நள்ளாள் நகை 4. முதலிய கட்டுரைகள் 50.

கம்பராமாயணம்:—(T. N. சேஷாசலம் ஐயர், B A. B. L.) கைகேசி சூழ்வினைப் படலம் முதல் அயோத்தியாகாண்டம் இறுதியாக 50 கட்டுரைகளில் ஆராயப்பெற்றிருக்கின்றது.

சூளாமணி:—(K. இராமரத்நம் ஐயர், B. A.) இதுகாறும் உரை யெழுதப்பெறாத இந்நூல், உரையுடன் பதிப்பிக்க ஆரம்பமாகி இவ்வாண்டில் ஐந்நூறு செய்யுள்கள் வந்துள.

யாப்பிலக்கணம்:—உறுப்பியலும், செய்யுளியலில் பாக்களின் இலக்கணமும்.

அப்பர்:—(E. N. தணிகாசல முதலியார், B .A. B. L.) அப்பர் 64 கலைகளைக் கையாண்ட பெருமை விரிவாக வரையப்பட்டிருக்கின்றது.

ஆண்டாள்:—(E. N. தணிகாசல முதலியார், B. A. B. L.) ஆண்டாள் பிறப்பு, இளமை, கல்வித்திறம், அனுபவம், யௌவனம், மதம், சித்தாந்தம், முத்தி முதலியவைகளின் உண்மை

மானத சாத்திரம்:—(T. P. மீனாக்ஷிசுந்தரம், M. A. B. L.) புலன்களின் அமைப்பும், உணர்வு முதலியவைகளின் தத்துவமும் விளக்கப்பெற்றுள.

பிலாரோ நாடகம்:—ஆங்கிலப்புலவர் R.B. Sheridan எழுதிய நாடகமொழிபெயர்ப்பு.

நவராத்திரி நாடகம்:—(K. N. சுந்தரேசன், B. A. Hons) ஓர் நவீன நாடகம்.

சிதம்பரதேவர் சரிதம்:—(Dr. V. S. அருணாசலம் பிள்ளை) முத்தியில் மனம் வைத்து உலகத்தில் விவகரிப்பார் பெருமையை உட்கொண்ட வோர் நாவல்.

களவியற் காரிகை:—(S. வையாபுரிப்பிள்ளை, B. A. B. L.) இதுகாறும் அச்சேறாத நூல். அகப்பொரு ளிலக்கணத்தின் சிறப்பை விளக்கவல்லது.

கந்தபுராணமும் சங்க நூல்களும்:—(பண்டிதர், திம்மப்பா ஐயர்) கந்தபுராணத்தைச் சங்கநூல்களோடு ஒப்புநோக்கி ஆராயும் கட்டுரைகள்.

இவை தவிர, மொழிபெயர்ப்புக் கட்டுரைகள், தமிழிரட்டையர், முதலிய கட்டுரைகள் பல.

ஒவ்வொரு வால்யூமிற்கும் விலை வருமாறு:— பைண்ட் செய்யாதது ரூ. 7 8 0
காலிகோ கில்ட் பைண்ட் ரூ. **8 8 0** ஆப்லெதர் கில்ட் பைண்ட் ரூ. **9 0 0**

இவ்விலையில் தபால் அல்லது இரயில் சார்ஜ் அடங்கவில்லை. இந்தியாவில் உள்ளவர்கள் இரயில்வே பார்ஸல் மூலமாகப் பெற்றுக்கொள்ளலாம். To Pay போட்டு அனுப்புவோம். எழெட்டெணுக்களுக்கு மேல் இரயில்வே கட்டணம் ஆகாது. பர்மா, ஸிலோன் இவ்விரண்டு இடங்களுக்கும் ரயிலில் அனுப்பமுடியாதாகையால் விலையுடன் தபால் பார்ஸல் சார்ஜ் ரூ. 2—4—0 சேர்த்தனுப்பவேண்டும். மலேயே, தென்னாப்பிரிக்கா முதலிய நாடுகளில் இருப்பவர் தபால் சார்ஜிக்கு ரூ 3. சேர்த்தனுப்பவேண்டும். இவைகளை வி. பி. யில் அனுப்ப இயலாது. முன்பணம் அனுப்பி எழுதல் வேண்டும்.

வர்த்தமானம்

சுயேச்சைச் சங்கம்:—இந்தியச் சட்டசபையின் மாஜித் தலைவரான ஸ்ரீமான் V. J. படேலின் முயற்சியால் அயர்லாந்தில் இந்திய அயர்லாந்து சுயேச்சைச் சங்கம் என்னும் பேருடைய ஒரு சங்கம் நிறுவப்பெற்றுளதென்றும், சீக்கிரத்தில் இதுபோன்றவொரு சங்கம் லண்டனிலும் ஸ்தாபனமாகுமென்றும், இச்சங்கம் இந்திய விடுதலைக்கும் அயர்லாந்தின் விடுதலைக்கும் உழைக்குமென்றும் அயல்நாட்டுச் செய்தி கூறுகின்றது.

***

புதிய பாலம்:—லண்டன் தேம்ஸ்நதியில் புதியதாகக் கட்டப்பட்ட பாலம் இப்பொழுது முடிவுற்றது. அப்பாலத்தை ஜூன்மாதக் கடைசியில் அரசர் பெருமான் திறந்துவைத்தார். இப்பாலம் கட்டுவதற்கு 55 லட்சம் பவுன் செலவாயிற்று, என்று லண்டன் செய்தி கூறுகின்றது.

***

மூன்றாவது வட்ட மேஜை மஹாநாடு:—இப்பொழுது இந்திய மிதவாதிகள் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் போக்கிற்கு இணங்காமல், வட்டமேஜை மஹாநாட்டின் சம்பந்தத்திலிருந்து விலகிக்கொள்ள விரும்புவதால், வருகிற அக்டோபரில் மூன்றாவது முறையாக வட்டமேஜை மஹாநாடு கூடுமென்றும், அன்னதற்கு முதல் வட்டமேஜை மஹாநாட்டிற்குச் சென்றிருந்த பிரதிநிதிகளில் பலர் அழைக்கப்படுவார்கள் என்றும் ஒரு வதந்தி பரவிவருகின்றதாம்.

***

தற்கால நிலை:—இந்தியாவின் தற்கால நிலையைப் பற்றிக் கவி ரவீந்தரநாத்டாகூர் விடுத்துள அறிக்கை வருமாறு:—

இந்தியாவின் அரசியல் நிலை பண்டை மிருகத்தன்மையை அடையும்நெறி செல்கின்றது. அடக்குமுறையும்பழிக்குப்பழியென்னும்கொள்கையும்ஒன்றன்பின் ஒன்றாகச் சுழன்றுகொண்டிருக்கையில் மக்கள்வாழ்வு சந்தேகத்திலும் துவேஷத்திலும் நிலைத்ததாய்ப் பிளவுபட்டு வருகின்றது. இவ்வித நிலைமை நீடித்திருக்குமானால் சிநேகஉணர்ச்சி யேற்படாது. எனவே அநுபவ சாத்யமான வோர் அரசியல் ஏற்பாடு செய்யமுடியாமற் போய்விடும். கஷ்டப்படுபவர் அதிக கஷ்டங்களை அநுபவிக்க நேர்ந்தாலும், அவர்கள் அதை மறத்தல் இயலும். ஆனால் சன்மார்க்க நெறிக்கு அயலான செயல்களால் ஏற்படும் புண்களை ஆற்றுவிப்பது கடினமாகும். பொருளாதார நிலையினால் உலகத்தில் ஏற்படும் கஷ்டங்களை ஜனங்கள் பொறுமையுடன் சகித்துக் கொள்ளக்கூடும். ஆனால் தர்ம விரோதமான கடுமைச் செயல்கள் மாந்தருக்குள் இருக்கும் கட்டைக் குலைத்துவிடும். மனித சமுகத்தின் நன்மையை முன்னிட்டு இவ்விதநிலை நீடியாதிருப்பதற் கேற்றவைகள் செயப்படவேண்டும். இப்பொழுது தென்படும் காட்சிகள் சகிக்கமுடியாதனவாக விருக்கின்றன. ஆளுவோருக்கும் ஆளப்படுவோருக்கும் இருந்துவரும் சம்பந்தம் துக்கத்தை அதிகமும் வளர்த்துவைக்கும் தன்மைத்தாயிருக்கின்றது. இது மனிதரிடம் மிருகசுபாவத்தை அதிகப்படுத்தும் என்று அஞ்சவேண்டியிருக்கின்றது. தேசத்தலைவர்களும், விதிவசத்தால் இந்தத் தேசத்துடன் இணைக்கப்பட்டிருப்பவர்களும் ஒரு சமாஸமான ஏற்பாட்டைச் செய்துகொள்ள முற்படவேண்டும். நீதி பொறுமை இவைகளை அஸ்திவாரமாகக்கொண்டு தலைவர்கள் காரியங்களில் முற்படவேண்டும். ஆள்வோரும் ஆளப்படுவோரும் இதைக் கவனிக்கவேண்டும். இப்பொழுது இந்தியாவில் இருந்துவரும் அரசியல்கொந்தளிப்பிலிருந்து நாகரிக நிலைமை ஏற்படும்படி உழைப்பதற்குரிய கடைசி முயற்சி செய்யத்தக்க சிந்தனாசக்தியுள்ள பலர் இந்தியாவில் இருக்கின்றார்கள் என்றே நான் நினைக்கின்றேன்.

***

ஜப்பானில் வேலையில்லாத் தவிப்பு:—சுயவாட்சியுடைய ஜப்பானில்வேலையில்லாத்திண்டாட்டம் அதிகரித்து வருகின்றதாம். ஜப்பான் தலைநகரத்தில் சர்வகலாசாலைப்பட்டம் பெற்றவர்களில் ஆயிரக்கணக்கானவர்கள் வேலையில்லாமல் திண்டாடுகின்றார்களாம். 1932-ம்ஆண்டு ஜப்பான் ரயில்வேயில்ஏற்பட்ட 1200 காலி ஸ்தானத்திற்கு 5000 பட்டதாரிகள் மனுப்போட்டனராம். அவர்களில் 8 பேர் தங்களது இரத்தத்தை மையாகக்கொண்டு மனுவை எழுதியுள்ளார்களாம். அதிகாரிகள் தங்கள்மீது இரக்கம் கொண்டு தங்களை வேலையில் வைத்துக்கொள்வார்கள் என்ற நம்பிக்கையால் அவர்கள் அவ்வாறு செய்துளார்களாம்.

***

சோக்கலிங்க வித்யாசாலை:—ஸ்ரீமான் N. S. A. R. அருணாசலம் செட்டியாரால் 1927-ம் ஆண்டு நிறுவப்பட்டுச் செவ்விய முறையில் நடந்துவரும் லக்ஷ்மிபுரம் சொக்கலிங்க வித்யாசாலையின் 5-வது ஆண்டு நிறைவு அறிக்கை வரப்பெற்றோம். மாணவ மாணவிகளுக்கு ஆரம்பக்கல்வியளிப்பதேஇக்கல்விச்சாலையின் முக்கியமான நோக்கம் என்பது அறிக்கையிலிருந்து தெரியவருகின்றது. இப்பாடசாலையில் முதலாண்டில் மூன்றுவகுப்புக்களும் இரண்டு உபாத்யாயர்களும் 75 மாணவர்களும் இருந்தனர். மூன்றாவது ஆண்டில் 4 வகுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டு 4 பேர் உபாத்தியாயராக நியமிக்கப்பெற்றனர். மாணவ மாணவிகளின் தொகையும் நன்கு அதிகரித்துளது. லக்ஷ்மிபுரம், கொத்தமங்கலம், கானாடுகாத்தான், பள்ளத்தூர் முதலிய விடங்களிலிருந்து இப்பாடசாலைக்கு மாணவர்கள் வருகின்றனர் என்றால், இப்பாடசாலையின் சிறப்பைப் பற்றிக் கூறுவது மிகையாகும். தமிழும் ஆங்கிலமும், கணிதம், பொது அறிவு நூல்களும் போதிக்கப்படுகின்றன. திருச்சி நாஷனல் காலேஜ் தலைவர் ஸ்ரீமான் V. சாரநாத ஐயங்கார், அண்ணாமலைச் சர்வகலாசாலை ஆசிரியர் R. P. சேதுப்பிள்ளை, ஜில்லா கல்வி உத்தியோகஸ்தர், (ராமநாதபுரம்) ஸ்ரீமான் G. தாமோதரம், தேவகோட்டைப் பகுதி டிப்டி இன்ஸ்பெக்டர் R. பாலகிருஷ்ணன், பள்ளத்தூர் ஹைஸ்கூல் தலைமை உபாத்தியாயர் A. M. S. ராகவன், முதலிய பலர் பாராட்டி வரைந்திருத்தலே, இக்கல்விச்சாலையின் நடைமுறைச் சிறப்பை விளக்குவதாகும். இத்தகையார் பலர் புகழ்மொழிக்குரியதாய் ஆரம்பக் கல்வித்துறையில் முயலும் இச்சொக்கலிங்க வித்தியாசாலையும், இதை ஸ்தாபனம்பண்ணி நடத்திவரும் ஸ்ரீமான் N S. A R. அருணாசலம் செட்டியாரும் நீடூழி வாழ வேண்டுமென்று இறைவனை இறைஞ்சுகின்றோம்.

M211, N28 KN
22.5.?
199144

KALANILAYAM
Reg. No. M. 2324.

— சரஸ்வதி பவுண்டரி —

தந்திவிலாசம்:—காஸ்டிங்.] [Established 1904] [டெலிபோன் நெ:—3002

96. புளியந் தோப்பு ஹைரோட், பெரம்பூர் பாரக்ஸ், சென்னை.

எம்மிடம் தேர்ச்சிபெற்ற இந்தியத் தொழிலாளர்களால் தயாரிக்கப்பட்ட ரங்கூன் & அமரிக்கன் டைப், ரைஸ்ஷெல்லர்களும், பாலிஷிங் கோன்களும், மூன்று தினுசாயுள்ள சவரன் டை பிரஸுகளும், வெள்ளிப் பாத்திரங்கள் செய்யும் பிரஸுகளும், பொன் வெள்ளித் தகட்டாலைகளும், கரும்பாலைகளில் கல்கத்தா சைஸ்களும், சாதா மூன்று கால் கரும்பாலைகளும், தண்டவாளச் சுழல்படிகளும், தண்டவாளத் தூண்களும், பலவிதமான தண்டவாளக் கிராதிகளும், ஆயில் காஸ் மோட்டார் எஞ்சின்களுக்குத் தேவையாயுள்ள ஸிலிண்டர், வாட்டர் ஜாகட்டுக்களும், மற்றத் தனிச் சாமான்களும், எங்கல்பர்க் டைப் நெம்பர் 1, 2, 3, 4, 7 & 8 பால்பேரிங் & சாதா ரைஸ் ஹல்லர்களும், அவைகளுக்குவேண்டிய தனிச் சாமான்களும், தண்டவாள சாதா புல்லிகளும், படபாதிப் புல்லிகளும், கிடைக்கும். ஆயில் காஸ் ஸ்டீம் எஞ்சின்களின் லைனரை ரீபோர் செய்தும் புதிய பிஸ்டன் போட்டும் கொடுக்கப்படும்.



முனிஸிபாலிடிகளுக்குத் தேவையாயுள்ள எலக்ட்ரிக் விளக்குப் போஸ்டுகளும், சாதாரண 1, 2, 3, 4, 5 கிளையுள்ள லாந்தர் போஸ்டுகளும், வாராவதிக்குப் போடக்கூடிய லாந்தர்போஸ்டுகளும் பிராக்கட்டுக்களும், மேனோல் கவர்களும், திம்மிசுகளும், குப்பைவண்டி இன்லெட் அவுட்லெட் வால்வுசெட்டுகளும், பைப்பு பிட்டிங்கிற்கு வேண்டிய தண்டவாளக் குழாய்களும், கப்பிளிங் பைப் டீ, பிரான்ச் ரெடியூஸர்களும், தோட்டத்தில் போடக்கூடிய தண்டவாளப் பெஞ்சு கால்களும், பள்ளிக்கூடத்துக்கு வேண்டிய சாதா மடிப்புப் பெஞ்சுகளும் கிடைக்கும்.

மைல்ஸ்டீல் தகட்டினால் செய்த பாயிலர் சிம்னிகள், டாங்குகள், நெல் அவிக்கும் பாய்லர்கள், டிரஸ்கள், வாராவதிகள் இன்னும் பலவிதமான ரிவிட்டு வேலைகள் யாவும் நேர்த்தியாய்த் தயாரித்துக் கொடுக்கின்றோம்.

சார்ஜிகள் மிகவும் சரசம். குறித்த காலங் தவறுவதில்லை. கேட்லாக்கிற்கு எழுதவும்.

— தேகபலம் —

:: புத்திர சந்தானம் ::

இவைகளையடைய எங்கள் ஆதங்க நிக்ரஹ மாத்ரைகளை உபயோகியுங்கள்.

சென்ற 51 வருஷங்களாகப் பேரும் புகழும் பெற்று வருகின்றன.

மேலும் தேக அசதி, மலச் சிக்கல், ஞாபகக் குறைவு முதலிய வியாதிகளைக் கண்டிக்கின்றன.

32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு ரூ. **1.**
5 டப்பிகள் ரூ. **4.**

இனும்! காம சாஸ்திரம் இனும்!
கேட்போருக்கு இனாமாகவும், தபாற்செலவில்லாமலும் அனுப்பப்படும்.

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே, மதராஸ்.

ஆ. ஸி. கஸ்தூரிரங்கய்யர் B.A., L.T.,
இயற்றிய

: : இராமாயண வினு விடை : :

இது சிறந்த கிளேஸ் காகிதத்தில் நன்கு அச்சிடப்பட்டு 380 பக்கங்கள் கொண்டது. எழு காண்டங்களும், அரிய நீதிகளும் தெளிவுவாய்ந்த அநுபந்தங்களும் அடங்கியது. விலை ரூபா 1 8 0

பாலவிநோதினி ஆபீஸ், 323, தண்டையாரப்பேட்டை
வண்ணாரப்பேட்டை போஸ்ட், மதராஸ்

NATIONAL
INSURANCE COMPANY, LIMITED.
Head Office:
NATIONAL INSURANCE BUILDING,
7, Council House Street, Calcutta.

New Policies Issued in 1931 for over	Rs. 1,32,33,000
Showing an increase over the New Business figure for 1930 of	16.54 %
Claims paid up to end of 1931 over	Rs. 90,00,000
Invested Funds amount to over	Rs. 1,75,00,000

LOW RATES LIBERAL CONDITIONS
NEW TABLES NEW BENEFITS

For particulars & Agencies please write to:—

R. G. DAS & Co., *Managers.* OR The Branch Secretary, Madras Branch, 113, Armenian Street, Madras.

FIRE & ACCIDENT RISKS
covered by
NATIONAL FIRE
AND
GENERAL INSURANCE COMPANY Ltd.,
NATIONAL INSURANCE BUILDING,
7, Council House Street, Calcutta.

The Branch Secretary, Madras Branch, 113, Armenian Street, Madras. OR R. G. DAS & Co., *Managers.*

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)